தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 58 59 58 மலர் : 11

உள்ளுறை

1. மகாவித்துவான் மே. வீ. வே. மறைவு 513
மு. சண்முகம் பிள்ளை
சிறப்புநிலைப் பேராசிரியா
சுவடிப்புலம்—ஓலை சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

2. தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் —
காண்டிகை உரை 516
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

3. தொண்டில் திளைத்த தூயவர்
சுவைட்சர் ... 532
முனைவர் ப.க. பொன்னுசாமி, எம்.எஸ்சி , பி.எச் டி.,
இயற்பியல் பேராசிரியர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்

4. தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள் 542
டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2015

துணர்: 58 இரத்தாட்சி — மாசி மலர்: 11

பிப்ரவரி — மார்ச் 1985

மகாவித்துவான் மே. வீ. வே. மறைவு

மு. சண்முகம் பிள்ளை.

சென்ற நூற்றாண்டில் தமிழகம் போற்ற விளங்கிய 'மகாவித்துவான், திருவாடுதுறை ஆதீன வித்துவானாக விளங்கிய திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களாவர். அவர் களுக்குப் பின்னரும் மகாவித்துவான் என்னும் சிறப்புப் பெயருடன் வழங்கப் பெற்றார் சிலருண்டு. இந்தத் தலைமுறையினரும் இதற்கு

முந்திய தலைமுறையினரும் சென்னை மாநகரில் அறிந்த மகா வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களே.

சென்னையில் இவர்களை அறியாத தமிழாசிரியர்கள் இல்லை; பதிப்பகங்கள் இல்லை. தம்முடைய வாழ்நாளின் பெரும் பகுதியும் பிழையின்றிச் செம்மையாக நூல்கள் வெளிவருவதற்கு அரும்பாடு பட்டார். அவர் கைப்பட்டு வந்த புத்தகங்கள் பலப்பல.

இலக்கிய இலக்கணங்களில் மிகு புலமை பெற்றவராகிய இவர் தமிழ் மரபு பிழைபட வழங்குதலைப் பார்த்துக் கொண்டிறார். யார் பேசினாலும், யார் எழுதினாலும் ஏற்ற திருந்திய சொல் வடிவம் இது ; தொடரியல் அமைப்பு இது என்று எடுத்துக் காட்டித் தெளிவுறுத்துவார். இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள 'தமிழ்-அன்றும் இன்றும்' என்னும் நூல் போற்றத் தக்க ஒன்று. அவர்கள் பதிப்பித்துள்ள நூல்களுள் யாப்பருங்கல விருத்தியுரையைப் பல சுவடிகளின் துணையால் செப்பஞ் செய்து வெளியிடச் செய்தமை சிறப்பாகக் குறிப்பிடத்தகும். யாப்பருங்கலக் காரிகைக்கும் செம்மையான பதிப்புக் கொண்டுவந்துள்ளார். மேலும் கூத்தநூலையும் அவர் பதிப்பித்துள்ளார். பவானந்தர் கழகச் சார்பில் அச்சிட்ட நூல்கள் பலவாம்.

சென்னைப் பல்கலைக் கழக அகராதிக் குழுவிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் பாடநூற் குழுவிலும் பல்லாண்டுகள் இருந்து அரும்பெரும் பணியாற்றியுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட கம்பராமாயணப் பதிப்புக் குழுவிலும் உறுப்பினராயிருந்து சிறப்புறப் பணிபுரிந்துள்ளார். மர்ரே ராஜம் பதிப்புகள் சிலவற்றிற்கும் உதவியுள்ளார். தமிழகப் புலவர் குழுவின் தலைவராகவும் திகழ்ந்தார்.

பிள்ளையவர்கள் இரண்டாம் உலகப்போர் நிகழ்ச்சியின் போது சிலகாலம் காஞ்சிபுரத்தில் வாழ்ந்து வந்தார். அப்பொழுது அங்குள்ள சமணர்களின் வேண்டுகோள்படி சிந்தாமணிக்கு விரிவுரை செய்து வந்தார். இச் சொற்பொழிவுத் தொடர்பாகச் சிறப்பு மலர் ஒன்று வெளியிட்டதோடு 'சிந்தாமணிச் செல்வர்' என்னும் பட்டமும் வழங்கினார்கள். தமிழக அரசின் கலைமாமணி பட்டமும், இந் நாளைய சிறப்புப்பட்டமாகிய டாக்டர் பட்டமும் அளித்துச் சிறப்பிக்கப் பெற்றார். அறிஞர் அண்ணா அவர்கள் அரசு சார்பில் 'செந்தமிழ்க் களஞ்சியம்' ,என்னும் சிறப்பு பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

தாம் இளமையில் தக்காரை அடுத்துக் கல்விபெற்ற நிலையை உள்ளித் தமிழ் பயில விரும்பும் மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புகளைத் தாம் வாழ்ந்து வந்த புரசைப்பாக்கத்தில் நடத்தி வந்தார் ; பிறரையும் அப் பணியில் கலந்து கொள்ளச் செய்தார். புரசைச் சுந்தரர் கல்லூரியில் பயன்பெற்றார் பலர். அவரிடம் பயின்ற அன்புடை மாணவர்கள் கூடி அவர்தம் பிறந்தநாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி, மகாவித்துவான் அவர்களின் வாழ்த்துரை பெற்று வந்தனர்.

இவர் எழுதி வெளியிட்ட நூல்கள் பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன், திரு. கண்ணபிரானார், குணசாகரர் அல்லது இன்சொல் இயல்பு. அற்புதவிளக்கு, இளைஞர் தமிழ்க் கையகராதி, அரிச்சந்திர புராணச் சுருக்கம் முதலாயின.

அரும்பெரும் நூல்களைப் பெற்றுக் கற்றுப் போற்றி அரியதோர் நூலகத்தையும் தம் இல்லத்தில் உருவாக்கியிருந்தார். அதில் உள்ள அரிய நூல்கள் பலவற்றை அண்மையில் ஜர்மன் முதலிய மேலை நாட்டுப் பல்கலைக் கழகங்கள் பெற்றுச் சென்றன.

முதுமையிலும் அவர்கள் திட்டமிட்டு முறைப்படி பணிசெய்து இளைஞர்களுக்கு வழிகாட்டியாய்த் திகழ்ந்தார். இத்தகு சீரியராகிய இப் பெரியார் 4—2—85 ல் தமது தொண்ணூறாவது அகவையில் ஆசாரியன் திருவடி அடைந்தார். அவர்களுடைய மறைவு தமிழுலகிற்கு குறிப்பாகப் பதிப்புத் துறைக்கு ஒரு பெரிய இழப்பேயாகும். அவர்கள் காட்டிய வழியில் நூல் பதிப்பிப்போர் நல்ல மரபுகளைப் போற்றி வருவார்களாக. அதுவே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியுமாகும்.

கொசுவை ஒழிக்க முந்திரிப்பழம்

கொசு பரவினால் கொடிய மலேரியா உண்டாகிறது. எனவே கொசுவை ஒழிப்பது முக்கியமாகிறது. இதற்குப் பல மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. பேராசிரியர் ஐசயோகுபோ என்பவர் ஒரு புதியமருந்தைக் கண்டுபிடித்திருக்கிறார். அது வேறு ஒன்றுமில்லை, முந்திரிப் பழத்தின் சாறுதான். பிற பூச்சிக்கொல்லி இரசாயனப் பொடிகளைவிட முந்திரிப் பழச்சாறு மிகவும் சக்தி வாய்ந்தது என்பதையும் எடுத்துரைத்துள்ளார். ஆப்பிரிக்க பழங்குடி மக்கள் கொசுக்கள் சேரலோச்சும் குட்டைகளில் இந்த முந்திரிப் பழங் களைக் கொட்டி வைப்பதன் மூலம் கொசுத் தொல்லையிலிருந்து விடுதலை பெறுவதையும் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தப் பழச் சாற்றிலுள்ள ஒரு வகைஅமிலம் (anacardic acid) கொசு ஒழிப்புக்குக் காரணமாகக்கூடும் என்கிறார் இந்த அறிஞர்.

நன்றி; அறிவியல் பூங்கா – தமிழ்ப்பல்கலைக் கழகம்

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

32. நடுக்கமாவது : துயர் நேருங்கொல் என்னும் உளக் கலக்கத்தான் உடம்பு அதிர்தல்

எ.டு :- வெம்மை தண்டா எரியுகு மறந்தலை
கொம்மைவாடிய இயவுள் யானை
நீர்மருங் கறியாது மூதிர்மருங்கோடி
அறுநீரம்பியின் நெறிமுதல் உணங்கும்
உள்ளுநர்ப் பனிக்கும் ஊக்கருங்கடன் (அக-29)

எனவரும்.

இஃது அச்சத்திற்குப் பொருளாக அமையும்.

இவை முப்பத்திரண்டும் இடத்திற்கேற்ப பிற மெய்ப்பாடுகளுக்கும் பொருளாக வருமென அறிக. உரையாசிரியன்மார் இவற்றிற்கு அசப்பொருள் பற்றிய செய்யுட்களையும் உதாரணமாகக் காட்டியுள்ளனர். ஆசிரியர் அகத்திணைக்குரிய பொருள்களை வகுத்து விதந்து பின்னர் ஓதுதலான் அங்ஙனங் காட்டுதல் மயங்கவைத்தலாம் என்க.

சூ. 13. புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
நகுநய மறைத்தல் சிதைவு பிறர்க்கின்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப (13)

கருத்து:- மன்னியவினைய (மெய்)எனப்பெறும் அகத்திணைபற்றி நிகழும் மெய்ப்பாடுகட்குச் சிறந்துரிமை பெற்று வரும் பொருள்களைத் தொகுத்துக்கூறத் தொடங்கி அகவொழுக்கம் களவு கற்பென்னும் இரு கைகோளாக நிகழுமென மேல் வகுத்துணர்த்தியமையன்றிக்களவின் பயனும் கற்பின் தொடக்கமுமாகிய வரைதலை ஆண்டு ஓரியலாக அமைத்துக் கூறாமையான் வரைவுமலிதல் வரைவு கடாதல் பற்றிக் கூறிய கிளவிகளுக்குரிய உணர்வுகள் விதந்துகூறும் சிறப்புடையவாக உள்ளமையான் அவற்றை அழிவில் கூட்டமாகிய கற்பிற்கு அடிப்படையாகக் கொண்டு அகத்திணை பற்றிய மெய்ப்பாட்டுப் பொருள்களைக் களவிற்குரியவை அழிவில் கூட்டத்திற்குக் காரணமாகிய வரைவிற்குரியவை அழிவில் கூட்டமாகிய கற்பிற்குரியவை என மூன்று வகைப்படுத்து ஓதுகின்றார்.

அவற்றுள் முதற்கண் களவிற்குரிய பகுதிகளை உணர்த்தத் தொடங்கி ஒன்றியுயர்ந்த பாலதாணையான் ஒத்தகிழவனும் கிழத்தியும் எதிருற்றுக் காணும் காட்சியின்கண் ஐயுற்றுநின்ற தலைவன் தலைவிமாட்டு நிகழும் "கண்ணேயலமரல் இமைப்பே அச்சம்" (கள-) என்னுமவற்றான் ஐயம் நீங்கி மெய்தொட்டுப்பயிறல் முதலாய வற்றை நிகழ்த்தித்தலைவியைக் கூடும் தெய்வப்புணர்ச்சிக்கு முன்னும்பின்னும் இருவர் மாட்டும் நிகழும் உணர்வுகளையும் செயல்களையும்,
களவியலுள்

வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கஞ் செப்பல் நாணுவரையிறத்தல்
நோக்குவ வெல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்கா டென்றிச்
சிறப்புடை மரபினவை களவெனமொழிப (கள-9)

எனவும்

முன்னிலையாக்கல் சொல்வழிப்படுத்தல்
நன்னயமுரைத்தல் நகைநனியுறாஅ
அந்நிலையறிதல் தெளிவகப்படுத்தலென்று
இன்னவை நிகழும் என்மனார் புலவர் (கள-10)

எனவும் கூறியவற்றானும் மெய்தொட்டுப்பயிறல் பொய்பாராட்டல் முதலிய கிளவிகளானும் புலப்படுத்திய உணர்வுகளையும் செயல்களையும் தொன்னூலார் மரபு பற்றி இருபத்து நான்கு பொருள்களாக வகுத்து அவற்றை ஆறுகூறுகளாக்கி ஓதுகின்றார். அவற்றுள் இச்சூத்திரம் முதலாங்கூறுபற்றி வரும் பொருள் புகுமுகம் புரிதல் முதலாய நான்குமாம் என்கின்றது.

பொருள்:- புகுமுகம் புரிதல் பொறிநுதல்வியர்த்தல் நகுநய மறைத்தல் சிதைவு பிறர்க்கின்மை என்னும் தகவாய முறைமையுடைய நான்கும் முதற்கூறு என மொழிவர் ஆசிரியர்.

ஒடு எண்ணுப் பொருட்டாய் வந்தது. ஏகாரம் இசைநிறை.

1. புகுமுகம் புரிதலாவது ; ஒருவர் ஒருவரை நோக்குதற்கண் ஒருவர் மற்றொருவர் நோக்கிற்கு உள்ளாதலை விரும்புதல்.

நாட்டமிரண்டும் அறிவுடைப்படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரையாகும் (கள-5)

என்றாராகலின் ஈண்டு முகமென்றது அந்நாட்டத்தினை என்பது தெளியப்படும். புரிதல்-விரும்புதல்.

எ-டு :- கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்
கள்என்ன பயனுமில (குறள்–1100)
என வரும். இஃது உவகைக்குப் பொருளாக வரும்.

இது தலைவிக்கே உரிய பொருளெனக் கூறுவர் பேராசிரியர் அது பொருந்துமாறில்லை.

கருமணியிற் பாவாய் நீ போதாய் யாம்வீழும்
திருநுதற் கில்லையிடம் (குறள்–1123)

என்பது தலைவன் நோக்கிற் றலைவி புகுந்தது

கண்ணுள்ளார் காதலவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கறிந்து (குறள்-1127)

என்பது தலைவி நோக்கிற் றலைவன் புகுந்தது. பிறவும் சான்றோர் செய்யுள் நோக்கி அறிந்து கொள்க.

2. பொறிநுதல் வியர்த்தலாவது : தலைவன் தன்னை நோக்கிய வழி அக்காதல் வெம்மையான் உட்கும் நாணும் ஒங்குதலின் தலைவி வியர்பொறித்த நுதலினளாதல். தலைவற்கு உட்குத்தோன்றாதாதலின் இஃது தலைவிக்கே உரிய பொருள் என அறிக. எடுத்துக்காட்டு வந்துழிக்கண்டு கொள்க.

இஃது மருட்கைக்கும் அச்சத்திற்கும் பொருளாக அமையும்

"பெரும்புழுக்குற்றநின் பிறைநுதற் பொறிவியர்
உறுவளியாற்றச் சிறுவரைதிறவென" (அக–136)

என்பது கற்பிற்குரித்தாகலின் ஈண்டைக்கு ஏலாதென்க. இதனால் தலைவிநுதல் வியர்ப்புறுதல் இயல்பென்பது புலனாகும்.

3. நகுநய மறைத்தலாவது தலைவிதன் காதலை வெளிப் படுத்தும் உள்ளுணர்வாற்றோன்றும் முறுவலை மறைத்தல் நயம்— விருப்பம். நயநகை என்பது முன்பின்னாக மாறி ஒரு சொல் நீர்மைத்தாய் நின்றது. இதுவும் தலைமகட்கே உரியதாகும்.

எ.டு :- முகைமொக்குள் உள்ளது நாற்றம் போற்பேதை
நகைமொக்குள் உள்ள தொன்றுண்டு (குறள்-1274)

எனவரும். இது பெருமிதத்திற்கும் உவகைக்கும் பொருளாக அமையும்.

4. சிதைவு பிறர்க்கின்மையாவது: நகு நயம்மறைத்தவழியும் தலைவனது குறிப்பானும் செயலானும் கிளர்ந்தெழும் காதலுணர் வான் எய்தும் உள்ளச்சிதைவு வினை புறத்தார்க்குப் புலப்படா

வண்ணம் தலைவி தன் நெஞ்சினை நிறுத்துதல் பிறர் என்றது ஈண்டுத் தலைவனும் ஆயமுமாம்.

எ.டு :- கரப்பினும் கையிகந் தொல்லாநின் உண்கண்
உரைக்கலுறுவ தொன்றுண்டு (குற. 1271)

எனத் தலைவன் கூறுதலான் தலைவி உளஞ்சிதைந்தவாறும் அவளதை மறைக் கலுற்றவாறும் கண்டு கொள்க.
இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

இவை நான்கும் முறையாக அமைந்த செய்யுளாகப் பேராசிரியர் காட்டும் மேற்கோள்.

யான்றற்காண்டொறும் தான் பெரிதுமகிழாள்
வாணுதல் வியர்ப்ப நாணினள் இறைஞ்சி
மிகை வெளிப்படாது நகைமுகங் கரந்த
நன்னுதல் அரிவை தன் மனஞ்சிதைந்ததை
நீயறிந்திலையால் நெஞ்சே
யானறிந்தேனது வாயாகுதலே என்பதாகும்.

இஃது உரைக்கேற்ப யாத்த பாடலாகும்.

சூ. 14 :- கூழைவிரித்தல் காதொன்று களைதல்
ஊழணி தைவரல் உடையெர்த் துடுத்தலொடு
ஊழி நான்கே இரண்டெனமொழிப (14)

கருத்து:- கூழைவிரித்தல் முதலிய நான்கும் இரண்டாங்கூறு என்கின்றது.

பொருள் :- கூழை விரித்தல் காதொன்று களைதல் ஊழணிதைவரல் உடைபெயர்த்துடுத்தல் ஆகிய முறைமையுடைய நான்கும் இரண்டாங்கூறு என மொழிவர் ஆசிரியர்.

1. கூழைவிரித்தலாவது கண்கூட முடித்த கனங்குழல் உள்ளத்தின் கண் நேர்ந்த சிதைவான் நெகிழ்ந்தமையின் அதனைச் செம்மையுறுத்தற் பொருட்டு விரித்தல்

இது செயன்மையாயினும் காதற்குறிப்புடையமையான் மெய்ப் பாட்டிற்குப் பொருளாயமைந்ததென அறிக. பின்வரும் செயற் பாடுகளுக்கும் இவ்விளக்கம் ஒக்கும். இதற்குப் பேராசிரியர் வலிந்து கூறும் விளக்கம் நூல்நெறிக்கு ஏலாமையை ஓர்ந்து

கொள்க. இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும். எடுத்துக்காட்டு வந்துழிக்கண்டுகொள்க.

2. காதொன்றுகளைதலாவது: காதணியாகிய தோடு செவித்துளையில்ஒன்ற நிறுத்துவதாகலின் உள்ளத்து நேர்ந்த சிதைவினான் மேனி மெலிந்தமைபோன்ற உணர்வுகாரணமாக முன்னர்விரித்த குழலை முடிப்பவள் ஆங்கே காதணிகள் தாம் நெகிழ்ந்து வீழாமுன் அவற்றை நன்கு பொருத்துற்றாகக் களைந்து கொள்ளுதல். காதொன்று—காதணி தொடுத்தல் தொடியாயினாற் போல ஒன்றுதல் ஒன்று என நின்றது இதனைத் தொழிலாகு பெயர் என்ப. இதுவும் இளிவரலுக்குப் பொருளாக அமையும். எடுத்துக்காட்டு வந்துழிக் கண்டு கொள்க.

3. ஊழணிதைவரலாவது: மங்கலமகளிர்க்குரிய அணிகளாகிய வளை தொடி விரற் செறி முதலியவை தன்மேனி மெலிவானே நெகிழ்வன போலக்கருதும் உணர்வான் அவற்றைச் செறிக்கும் முயற்சியான் தைவருதல். மங்கல மகளிர்க்கென வகுத்துக்கொள்ளப் பெற்றமையான் வளை முதலாயவற்றை ஊழணி என்றார் ஊழ்-நியதி. இதுவும்இளிவரலுக்குப் பொருளாக அமையும். எடுத்துக்காட்டு வந்துழிக் கண்டு கொள்க.

4. உடைபெயர்த்துடுத்தலாவது : செறித்துப் பிணிக்காத மேலாடை இடைசூழ் மேகலை முதலியவற்றைத் திருத்த உடுத்தல். இதுவும் இளிவரலுக்குப் பொருளாக அமையும் எடுத்துக்காட்டு வந்துழிக் காண்க.

இவை நான்கும் இம்முறையே நிகழ்தலான் "ஊழி நான்கே" என்றார் ஊழ்-முறைமை.

புகுமுகம் புரிதல் முதலாகிய இவ்எட்டும் களவியலிற் கூறிய வேட்கை ஒருதலையுள்ளுதல் மெலிதல் என்பவற்றிற்கும், நன்னய முரைத்தல் நகைநனியுறா அந்நிலையறிதல், மெலிவுவிளக்குறுத்தல் என்பவற்றிற்கும், தெம்தொட்டுப்பயிறல், பொய்பாராட்டல், மறைந்தவற்காண்டல் முதலியவற்றிற்கும் உரியவாக நிகழும் மெய்ப்பாட்டுப் பொருள்களாக அமையும்.

இவை நான்கும் வந்த செய்யுளாகப் பேராசிரியர் காட்டும் மேற்கோள்.

> விண்ணுயர் லிறல் வரைக் கவாஅன் ஒருவன்
> கண்ணின் நோக்கிய தல்லது தண்ணென
> உரைத்தலுமில்லை மாதோ அவனே

வரைப்பாற் கடவுளு மஃலன் அதற்கே
ஓதிமுந்துறக் காதொன்று ஞெகிழ
நிழலவிர் மணிப்பூண் நெஞ்சொடு கழலத்
துகிலும் பன்முறை நெடிது நிமிர்ந்தனவே
நீயறி குவையதன் முதலே
யாதோ தோழியது கூறுமாறே'' என்பதாகும்.

இதுவும் உரைக்கேற்ப யாத்த பாடலாகும்.

சூ. 15 :- அல்குல்தைவரல் அணிந்தவை திருத்தல்
இல்வலி யுறுத்தல் இருகையு மெடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப (15)

கருத்து :- அல்குறைவரல்முதலிய நான்கும் மூன்றாங் கூறு என்கின்றது.

பொருள் :- அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல் இவ்வலியுறுத்தல் இருகையுமெடுத்தல் என்று சொல்லப் பட்ட நான்கும் மூன்றாங் கூறு என மொழிவர் ஆசிரியர்.

இவை நான்கும் சிறப்புடை மரபினவை களவு (கள-9) என்னுமிடத்துக் கூறிய நாணுவரையிறத்தற்கும் இன்னவை நிகழும் (கள-10) என்னுமிடத்திற்கூறிய தன்னிலையுரைத்தற்கும் இயற்கைப் புணர்ச்சிக்குரிய கிளவிகளுள் இடம் பெற்றுத்தழால், இடையூறுகிளத்தல் முதலியவற்றிற்கும் உரியவாக் நிகழும் மெய்ப்பாட்டுப் பொருள்களாதலின் ''சொல்லிய'' நான்கு என்றார். ஒடுவும் ஏகாரமும் மேற்கூறியாங்கு நின்றன.

1. அல்குல்தைவரலாவது உடைபெயர்த்துடுத்த வழி அவ்வுடை அற்றம் மறைய நன்குபொருந்தியுளதா என்பதனை அறிய இருப்புறுப்பினைச் சூழ்ந்துள்ள ஆடையை தைவருதலாம். தலைமயிரை வாரிமுடிதலைத் தலைவாரி முடித்தல் என்பது வழக்காதலின் அல்குலைச் சூழ்ந்த ஆடையைத் தைவருதலை அல்குல் தைவரல் என்றார் என்க. ''அல்குல்'' என்னும் இச் சொல் இருத்தல் தங்குதல் என்னும் பொருள்தரும் 'அல்கல்' என்னும் தொழிற் பெயரடியாக ஆக்கிக் கொள்ளப்பட்டதொரு திரிசொல்லாகும். ஆதலின் அஃது இருப்புறுப்பினையும் இடக்கர் உறுப்பினையும் இடத்திற்கேற்ப உணர்த்தி நிற்கும். இடைக்கால இலக்கியங்களில் பெரும்பான்மையும் இடக்கர் உறுப்பினையே குறித்து வழங்கி வருதலான் உரையாசிரியன்மார் நூலாசிரியர் கருத்துணராது விளக்கம் கூறிச் செல்வாராயினர்,

ச. சோ. பாரதியார் இருப்புறுப்பெனப் பொருள் கொண்டா ராயினும் அவ்வுறுப்பினைத் தைவரல் என்றே அவரும் பொருள் கூறிச் சென்றார்.

அவர் தம் விளக்கம் குலமகளிர் பண்பாட்டிற்கு இழுக்காகு மெனவிடுக்க.

2. அணிந்தவை திருத்தலாவது: அற்றம் மறைக்கும் உடையினைத் தைவந்தவன் அதனொடு இடையிற் புனைந்த தழையணி, மணிமேகலை முதலிய அணிகலன்களையும் குறங்கு செறி, சிலம்பு முதலிய அணிகலன்களையும் பண்டுபோல அமையத் திருத்துதலாம். இவை செவிலி முதலியோரால் புனையப்பட்டமை தோன்ற 'அணிந்தவை' என்றார். எனவே ஊழணி வேறு இவைவேறென்பது புலனாகும்.

இவை இரண்டும் இளிவரலுக்குப் பொருளாக அமையும், சான்றோரிலக்கியங்களுள் எடுத்துக்காட்டுவந்துழிக்கண்டு கொள்க.

3. இல்வலியுறுத்தலாவது: தலைவன் தனது மெய்தொட்டுப் பயின்று முன்னிலையாக்கி இடம் பெற்றுத் தழுவமுற்பட்டுழி, பாலது ஆணையான் உள்ளம் அவன் வழிச்சேறலைத் தனது மடப்பத்தான் தகைத்தற் பொருட்டு செறாஅச் சிறு சொல்லும் செற்றார் போல்நோக்கும் உடையவளாய் ஏதிலார் போலப் பொது நோக்கு நோக்கித்தன் இற்பிறப்பின் மாண்பினைத்தலைவி வலியுறுத்தலாம்.

இது பெருமிதத்திற்குப் பொருளாக அமையும் எடுத்துக்காட்டு வந்துழிக்காண்க.

4. இருகையுமெடுத்தலாவது: தலைவன் தன்னைத் தழுவும் குறிப்பொடு நெருங்குமிடத்து நாணம் மீதூர்தலான் தன்முகத்தினை மறைத்துக் கொள்ளும் கருத்தொடு கைகளை முக நோக்கி எடுத்தல் களவியலுள் 'இடையூறுகிளத்தல்' என்னும் கிளவிக்குரியவாய் நிகழும் மெய்ப்பாட்டுப் பொருள் இதுவென்க. இதனை இடைக்காலத்தார் நாணிக்கண்புதைத்தல்'' என்பர். இதற்குப் பேராசிரியர் கூறும் விளக்கம் நாணுடைய மகளிர்க்கு ஒவ்வாமையறிக. இஃது உவகைக்குப் பொருளாக அமையும் எடுத்துக்காட்டுவந்துழிக் கண்டு கொள்க.

இவை நான்கும் கூடுதலுறுதற்கு நிமித்தமாகலின் இவற்றின் பின் இயற்கைப் புணர்ச்சி நிகழுமென்க. எனவே புகுமுகம் புரிதல்

முதல் இருகையுமெடுத்தல் இறுதியாக உள்ள பன்னிரண்டும் புணர்ச்சிக்கு முன் நிகழும் மன்னியவினைய நிமித்தமாம் என்பது புலனாகும்.

சூ. 16:- பாராட்டெடுத்தல் மடந்தப உரைத்தல்
ஈரமில்கூற்றம் ஏற்றலர் நாணல்
கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ
எடுத்த நான்கே நான்கென மொழிப (16)

கருத்து:- பாராட்டெடுத்தல் முதலிய நான்கு பொருளும் நான்காம் கூறு என்கின்றது.

பொருள்:- பாராட்டெடுத்தல், மடந்தப உரைத்தல், ஈரமில்கூற்றம் ஏற்றலர் நாணல், கொடுப்பவை கோடல் என்பது உட்படக் கூட்டிக்கிளந்து சொல்லிய நான்கு பொருளும் நான்காம் கூறு என மொழிவர் ஆசிரியர்.

இவை களவியலுள் கூறிய தெளிவகப்படுத்தல் (கள-10) சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித் தீரத்தேற்றம் (கள-11) நொந்து தெளிவொழிப்பினும், அச்சம் நீடினும் தோழி குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும் களவறிவுறினும் எனவரும் கிளவி முதலியவற்றிக்கு உரியவாக நிகழும் மெய்ப்பாடுகட்குரிய பொருள் களாகும் என்பது தோன்ற "எடுத்த நான்கு" என்றார்.

1. பாராட்டெடுத்தலாவது புணர்ச்சி நிகழ்ந்த பின்னர்த் தனது ஆராக்காதலுணர்வு மாறாமை விளங்கத் தலைவியின் நல முதலியவற்றைப் பரக்க பேசுதல்,

தலைவியின் பண்பு முதலியவற்றைப்புனைந்து தனது மீளா வேட்கையைத் தலைவன் விதந்து கூறலின் பாராட்டல் என்னாது பாராட்டு எடுத்தல் என்றார்.

இஃது இருவர்க்கும் ஒக்குமாயினும்
காமத்திணையிற் கண்ணின்று வருஉம்
நாணுமிடனும் பெண்மைய வாகலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்படவாரா அவள்வயினான் (கள-18)

என்பது மரபுபற்றிய விதியாகலின் தலைவி பாராட்டுத்தல் அவள் உள்ளத்தே நிகழுமென அறிக. தலைவன் பாராட்டுதல் வெளிப் பட நிகழும் என்க.

எ. டு:- கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ

பயிலியது கெழீ இய நட்பின் மயிலியல்
செறிஎயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீ அறியும் பூவே (குறு-2)

என்பது தலைவன் தலைவியைப் பாராட்டியது.

நிலத்தினும் பெரிதே வானினுமுயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேனிழைக்கும் நாடனொடு நட்பே (குறு-3)

என்பது தலைவி பின்னொரு காலத்துத் தோழியிடத்துக் கூறியது இது தலைவனைப் பாராட்டிய பாராட்டு. இந்நுட்பந் தோன்றப் பாராட்டுரைத்தல் என்னாது பாராட்டு எடுத்தல் என்றார் என அறிக.

இஃது உவகைக்குப் பொருளாக அமையும்.

2. மடந்தப உரைத்தலாவது : பெதும்பைப் பருவத்து முற்றி நின்ற மடப்பம் சிறிது நீங்கத் தலைவி அளவோடு பேசுதலாம். மடம் பெண்மைக்குரிய குணனாகலான் இதுதலைவற்குரித் தன்மை புலப்படும். இது பெரும்பான்மையும் தலைவிக்குத் தோழியை நோக்கியதாக நிகழும்.

எ.டு ;- அன்னாய் வாழி வேண்டன்னை என்னை
தானும் மலைந்தான் எமக்குந்தழை யாயின
பொன்வீ மணியரும்பினவே
என்னமரங்கொல் அவர் சாரலவ்வே (ஐய-20)

இதன்கண் தலைவி செவிலிக்குத்தன் களவொழுக்கத்தைப் புலப் படுத்துமாறு தோழியிடம் கூறும் மடனழிவு கண்டு கொள்க.

எக்கர்ஞாழல் இணர்படு பொதும்பர்த்
தனிக்குருகுறங்குந் துறைவற்கு
இனிப் பசந்தன்றென் மாமைக்கவினே (ஐங்-144)

இதன்கண் தலைவற்கு வரைவு கடாதல் முகத்தான் தலைவி கூறிமடனழிய நின்றவாறு கண்டு கொள்க. இது பெருமிதத்திற்குப் பொருளாக அமையும்.

3. ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணலாவது: நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும் மாறுபட்டமையானும் அறிமடம் நீங்கிய உரையானும் தலைவியைச் செவிலியும் நற்றாயும் ஐயுற்ற வழிக்கூறும் கடுஞ் சொற்களை மறாது ஏற்றுப் புறத்தார்க்கு இது புலனாங் கொல் எனக் கருதித் தலைவி நாணுதல்.

இனி நகையிலாப்பழிச்சொற்களை ஏற்றிக் கூறும் அம்பல் மகளிரின் அலருக்கு நாணுதல் எனப் பொருள் கோடலுமாம். இப் பொருட்கு "ஏற்றலர்" என்பது வினைத்தொகை மொழியாகும்.

எ.டு :- யானே ஈண்டையேனே என்னலனே
ஆனா நோயொடு கானலஃதே
துறைவன் தம்மூரானே
மறையலராகி மன்றத்தஃதே. (குறு—97)

எனவும்

கௌவைதூற்றும் வெவ்வாய்ச்சேரி
அம்பல் மூதூர் அலர்நமக் கொழியச்
சென்றனர் ஆயினும் செய்வினையவர்க்கே
வாய்க்கதில் வாழி தோழி ...... (அக—34)

எனவும் வரும்.

இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

4. கொடுப்பவை கோடலாவது : தலைவனாற் கொடுக்கப் பெறும் தழையும், கண்ணியும் தாரும் மாலையும் ஆகிய கையுறைகளை ஏற்றுக்கோடல்

எ.டு :- பெரும் புலர் விடியலின் விரும்பப் போத்தந்து
தழையுந் தாரும் தந்தனன் இவன் என
இழையணி ஆயமொடு தகுநாண்தடைஇத்
தைத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோட்குறுமகள் ...... (நற்-80)

எனவரும். இஃது உவகைக்குப் பொருளாக அமையும்.

"எடுத்த" என்றதனான் கொடுப்பவை கோடற்குத்தடு மாறலும் இதன்கண் அடங்குமெனக்கொள்க. அவ்வழி அஃது அச்சத்திற்குப் பொருளாக அமையும்.

எ.டு :- ...... குன்ற நாடன்
உடுக்குந் தழைதந்தனனே யாமஃது
உடுப்பின் யாயஞ் சுதுமே, கெடுப்பின்
கேளுடைக் கேடஞ்சதுமே, ஆயிடை
வாடலகொல்லோ தாமே ...... (நற்-359)

எனவரும்.

17. தெரிந்துடம்படுதல் திளைப்புவினை மறுத்தல்
கரந்திடத் தொழில் கண்டவழியுவந்தலொடு
பொருந்திய நான்கே ஐந்தெனமொழிப 17

கருத்து :- தெரிந்தும்படுதல் முதலிய நான்கு பொருளும் ஐந்தாங் கூறு என்கின்றது.

பொருள்:- தெரிந்துடன்படுதல் திளைப்பு வினைமறுத்தல் காந்திடத் தொழிதல் கண்டவழியுவத்தல் எனப்பொருந்திய நான்கும் ஐந்தாங்கூறு எனப்புகல்வர் ஆசிரியர்.

இவை களவியலுட் கூறிய, மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்த வழித்தோழிக்கு நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும், அருமை செய்தயர்ப்பினும் வழிபாடு மறுத்தல், பெற்றவழி மலியினும் (கள-21) எனவரும் கிளவி முதலியவற்றிற்குரியவாக நிகழும் பெய்ப்பாடுகட்டுப் பொருள்களாம். என்பதை வலியுறுத்தப் "பொருந்திய" நான்கு என்றார்.

1. தெரிந்துடம் படுதலாவது : தலைவன் ஒருவழித்தணத்தல் முதலியவற்றையும், வரைவுநீட்டித்தலையும் அம்பலும், அலரும் எழுந்து பரவுதலையும் தாயர்வெறியாட்டு முதலியவற்றை நிகழ்த்துதலையும் பிறவற்றையும் ஆராய்ந்து இனிச்செயற்பாலன வற்றைத் தேர்ந்து அறத்தொடுநிலைவாயிலாகத் தனது நிலைமையைத் தெரிவிக்கத்தலைவி உள்ளம் நேர்தல்.

உடம்படுதல் என்பது ஈண்டுத் தெரிவித்தல் என்னும் பொருள்பட நின்றது. பொதுப்படக் கூறியுள்ளமையான் தலைவி உடம்போக்கிற்கு உடம்படுதலும் கொள்க.

எ-டு:- . ... அன்னை

எவன் செய்தனையோ நின் இலங்கெயிறு உண்கென
மெல்லிய இனிய கூறலின் வல்விரைந்து
உயிரினும் சிறந்த நாணும் நனிமறந்து
உரைத்தல் உய்ந்தனனே தோழி சாரல்
காந்தள் ஊதிய மணி நிறத்தும்பி
தீந்தொடை நரம்பின்இமிரும்
வான் தோய்வெற்பன் மார்பணங்கெனவே (நற்-17)

எனவரும்.

இஃது பெருமிதத்திற்குப் பொருளாக அமையும்.

2. திளைப்புவினை மறுத்தலாவது: தலைவனது வருந் தொழிற் கருமையும் இடையூறும் எண்ணித் தலைவி வரைவு கடாதற் கருத்தினளான் இருவகைக்குறிக் கண்ணும் இடையீடு செய்து கூட்டத்தைத்தவிர்த்தலாம் தவிர்த்தலை மறுத்தல் என்றார்.

எ. டு:- கருங்கற் கான்யாற்றருஞ்சுழி வழங்கும்
கராஅம் பேணாய் இரவரின்
வாழேன் ஐய மை கூர் பனியே (நற்-292)

எனவும்

குடிமுறை புரக்கும் நெடுமலை நாட
உரவுச் சின வேழம் உறுபுலி பார்க்கும்
இரவின் அஞ்சாய், அஞ்சுவல் இரவின்
ஈரளைப் புற்றம் காரென முற்றி
இரைதேர் எண்கினம் அகழும்
வரைசேர் சிறுநெறி வாராதீமே (நற்-336)

எனவும் வரும்

இஃது அச்சத்திற்குப் பொருளாக அமையும்.

3. கரந்திடத்தொழிதலாவது : தலைவனைக் கண்டவழி உளந்தடுமாறுமென அஞ்சி அவன்காணாவகையிற் கரந்து மனையிடத்து அடங்கி அவனின் நீங்கியிருந்தல். ஒழிதலாவது தலைவன் வழியமையாது தவிர்த்தல். தங்குதல் எனக் கருத்துப் பொருள் கூறுவர் உரையாசிரியன்மார். அது சொற் பொருளாகாமை எழுத்ததிகாரத்து விளக்கப்பட்டது.

எ. க:- யாவதும் அறிகிலர் கழறுவோரே
தாயில் முட்டைபோல உட்கிடந்து
சாயின் அல்லது பிறிதெவன் உடைத்தே
யாமைப் பார்ப்பின் அன்ன
காமங் காதலர் கையற விடினே (குறு-152)

எனவரும்.

இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

4. கண்டவழி உவத்தலாவது ; கரந்துறைதலால் ஆற்றாமைமிக்கு வருந்திப் புலம்பியிருக்குங்கால் தலைவன் புகா அக்காலை புக்கெதிர்ப்பட்டுழியும் பகா விருந்தின் பகுதியாய வழியும் (களா-17) ஒருவரை யொருவர் கண்டு தமக்குள்ளே பெருங் களிப்புறுதல்.

எ டு:- அன்னையோ எல்லீரும் காண்மின் மடவரல்
மென்னடைப் பேடை துணைதரத்தற் சேர்ந்த
அன்னவான் சேவற் புணர்ச்சிபோல் ஒண்ணுதல்
காதலன் மன்ற அவனை வரக் கண்டு ஆங்கு
ஆழ்துயரமெல்லாம் மறத்தனள், பேதை
நகையொழிந்து நாணுமெய் நிற்ப இறைஞ்சித்

தகையாகத் தையலாள் சேர்ந்தாள் நகையாக
நல்லெழில்மார்பனகத்து (கலி—107)

எனவரும் இதன்கண் "அவனைவரக்கண்டாங்கு ஆழ்துயரம் எல்லாம் மறந்தனள்" என்னும் பகுதியே இப்பொருட்கு உரியதாகும் எனக் கொள்க.

இஃது உவகைக்குப் பொருளாக அமையும்.

சூ 18 :- புறஞ் செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையறவுரைத்தலொடு
புலம்பிய நான்கே ஆறென மொழிப (18)

கருத்து : புறஞ்செயச் சிதைதல் முதலிய நான்கு பொருளும் ஆறாங்கூறு என்கின்றது.

பொருள் : புறஞ் செயச் சிதைதல் புலம்பித்தோன்றல், கலங்கி மொழிதல் கையறவு உரைத்தல் எனப்புலப்படுத்தப்பட்ட நான்குபொருளும் ஆறாங் கூறெனவிளம்புவர் ஆசிரியர்.

இவை களவியலுட் கூறிய நோக்குவவெல்லாம் அவையே போறல் மறுத்தல் மயக்கம் (களவி—9) காட்சி ஆசையிற் களம்புக்குக் கலங்கி வேட்கையில் மயங்கிக் கையறு பொழுதினும் (கள–17) நொந்து தெளிவொழிப்பினும் தமர்தற்காத்த காரணம்குங்கினும் பொழுதும் ஆறும் புரைவதன்மையின் அழிவுதலை வந்த சிந்தைக் கண்ணும் (கள—21) எனவரும். கிளவி முதலாயவற்றிற்குரியவாக நிகழும் மெய்பாட்டுப் பொருள்கள் என்பது விளங்கப் புலம்பிய நான்கே என்றார்.

புலம்பிய என்றது புலஞ்செய்த என்றவாறாம்: சொல்லிய எனினும் ஒக்கும் புலம்பல்-சொல்லுதல் அறிவித்தல், புலம்பிய என்றது பெயரடியாகப் பிறந்த எச்சச் சொல்.

1. புறஞ் செயச் சிதைத்தலாவது செவிலியும் ஆயத்தாரும் செய்யும் ஒப்பனைகள் தலைவன் கண்டு பயனுறாது செல்லுதலைக் கருதி அவர்தான் ஒப்பனை செய்யும்வழி உள்ளம் சிதைந்து வருந்துதல். இஃது அழுகைக்குப் பொருளாக வரும். எடுத்துக்காட்டு வந்துழிக்கண்டு கொள்க.

2. புலம்பித்தோன்றலாவது தலைவியின் நெஞ்சம் தலைவன் வழிச்சென்று இணைந்து நிற்றலாம். பண்டுபோலக் கலந்து விளையாடாமல் ஆயத்தாரிடையேஇருந்தும் தான் தனியள் போலக் காணப்படுதல்

எ-டு :- இரும்பனந்தீம்பிழி உண்போர் மகிழும்
ஆர்கலி யாணர்த் தாயினும், தேர்கெழு
மெல்லம் புலம்பன் பிரியின் புல்லெனப்
புலம்பாகின்றே தோழி (நற்-38)

என வரும்

இதுவும் அழுகைக்குப் பொருளாக அமையும். இளிவரல் என்பதற்கும் ஏற்கும்,

3, கலங்கிமொழிதலாவது : தலைவன் வரைபொருள் முதலியவைபற்றிப் பிரிந்தமையான் உற்ற நிறையழிதுயரம் காரணமாக மறை புலப்பாடமாறு உளங்கலங்கிப் பேசுதல்.

எ-டு:- நக்கு நலனும் இழந்தாள் இவளென்னும்
தக்கவிர் பேசலும், இழித்திலேன் மன்னோ
மிக்கவென் நாணும் நலனுமென் உள்ளமும்
அக்கால் அவனுழை ஆங்கே ஒழிந்தன்று
உக்காண், இஃதோருடம் புயிர்க் கூற்றாகச்
செக்கரம் புள்ளித் திகிரிஅலவனொடியான்
தக்கது பன்மாண் நினைந்து (கலி-146)

என வரும்.

இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

4. கையறவுரைத்தலாவது ! தனிமையுறுத்தும் தாங்காத் துயரால் தடுமாறும் நெஞ்சினளாய் தலைவி தனது அச்சமும் நாணும் மடனும் இகந்துதானுற்ற அவலத்தைச் சுற்றமறியப் பேசுதல்

எ-டு:- நினையுமென் உள்ளம்போல் நெடுங்கழி மலர் கூம்ப
இணையுமென்நெஞ்சம் போல் இனங்காப்பார் குழல்
தோன்ற
சாய என்கிளவி போல்செவ்வழியாழ் இசைநிற்பப்
போயவென் ஒளியே போல்இருநிலையே பகல்மாயக்
காலன் போல் வந்த கலக்கத்தோடென்றலை
மாலையும் வந்தின்றினி (கலி-143)

என வரும்.

இதுவும் இளிவரலுக்குப் பொருளாக அமையும். கலங்கி மொழிதலும் கையறவுரைத்தலும் அகனைந்திணைக்கண் விரவும் பெருந்திணைப் பகுதிகளாகும்.

சூ. 19:- அன்னபிறவும் அவற்றொடு சிவணி
மன்னிய வினைய நிமித்தமென்ப (19)

கருத்து:- மேற் கூறிய இருபத்து நான்கினோடு அன்னபிறவும் காமவொழுக்கத்து மெய்ப்பாட்டுப் பொருளாக வரு மென்றும். இவ்இருபத்து நான்கும் நிலைபேறுடைய காம ஒழுக்கம் நகழ்தற்கு நிமித்தமாம் என்றும் கூறுகின்றது.

பொருள்:- மேல் ஆறு கூறுகளாக வகுத்தோதப் பெற்ற இருபத்து நான்கும் அவை போல்வன பிறவும் அவற்றொடு கூடி நிலைபேறுடைய காமவொழுக்கத் தினது நிமித்தமாம் என்று கூறுவர் புலவர்.

''எல்லா உயிர்க்கும் இன்பமென்பது தானமர்ந்து வருஉம் மேவற்றாகும்''

ஆதலின் மன்பதை மறையாதுநிலை பெறுதற்குக் காரணமாகிய காம ஒழுக்கம் "மன்னிய வினை'' எனப்பட்டது.

மேற்கூறிய இருபத்து நான்கும் அவை போல்வன பிறவும் தனித்தனி மெய்ப்பாடு போலும் என மயங்கற்க. அவையாவும் காம ஒழுக்கத்திற்கு நிமித்தமாகிய பொருள்களே என்பது விளங்க வினைய நிமித்தம் என்ப'' என்றார்.

அன்ன பிறவாக வருவன அகத்திணைக்குரிய பொருளாக வரல் வேண்டுமென்பார் "அவற்றொடு சிவணி என்றார்.

அவை வருமாறு: மறைத்தவற் காண்டல், தற்காட்டுறுதல் நிகழ்ந்தவையுரைத்தல், கையுறை மறுத்தல்முதலியவாம்.

எ, டு:- செல்லும்மன்னோ மெல்லம் புலம்பன்
செல்வோன் பெயர் புறத்திரங்கி முன்னின்று
தகைஇய சென்ற வென் நிறையில் நெஞ்சம்
எய்தின்று கொல்லோ ... (அகம்-330)

என்பது மறைந்தவற் காண்டல். இஃது உவகைக்குப் பொருளாக அமையும்.

இன்னளாயினள் நன்னுதல் என்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழி... (குறு-98)

என்பது தற்காட்டுறுதல். இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

துறைவன் துறந்தெனத் துறையிருந்தழுதவென்
மம்மர் வாண்முகம் நோக்கி, அன்னைநின்
அவலம் உரையென்றனளே, கடலென்
பைஞ்சாய்ப் பாவை கொண்டு
வண்டலஞ் சிறுமனை சிதைத்த தென்றேனே

(நச்சர் உரைமேற்கேள்) இது நிகழ்ந்தவையுரைத்தல். இஃது அச்சத்திற்கும் இளிவரலுக்கும் பொருளாக அமையும்.

நெய்யொடு மயங்கிய உழுந்து நூற்றன்ன
வயலையஞ் சிலம்பின் தலையது
செயலையம் பகைத்தழை வாடுமல் ளாய் (ஐங்-211)

இதன்கண் தழை வாடும் என்றமையான் கையுறை மறுத்தமை புலப்படும். இஃது அச்சத்திற்கும் அழுகைக்கும் பொருளாக அமையும்.

பிறவும் இங்ஙனம் மெய்ப்பாடு தோன்றுதற்கு ஏற்புடைய பொருளாக வருவனவற்றையெல்லாம் ஒர்ந்து இதனான் அடக்கிக் கொள்க.

சூ. 20 :- வினையுயிர் மெலிவிடத்தின்மையு முரித்தே

கருத்து :- மேலதற் கொருபுறனடை கூறுகின்றது.

பொருள் :- காம ஒழுக்கத்தின் கண், மெய்தொட்டுப் பயிறல் முதலிய செயற்பாடுகள் நிகழுந்துணையும் ஆற்றாமல் உணர்வு மெலிந்த விடத்துச் "சொல்லிய நுகர்ச்சி" (இயற்கைப் புணர்ச்சி) வல்லே பெறுதலும் கூடுமாகலின் அவ்வழிப் புணர்ச்சிக்குரியவாக மேற்கூறிய நிமித்தங்கள் முறையே நிகழ்தல் இல்லையாதலும் உரித்து.

வினை என்றது மேல் "மன்னிய வினை" என்று கூறிய காம ஒழுக்கத்தை. உயிர் என்றது காதலுணர்வினை. ஈண்டுக் காம ஒழுக்கம் என்றது கூடுதலுறுதலாகிய இயற்கைப் புணர்ச்சியை. பாராட்டெடுத்தல் முதலியவை புணர்ச்சிக்குப்பின்னிகழ் வனவாதலின் ஈண்டு இன்மையும் உரித்தே என்றது புகுமுகம் புரிதல் முதலாகக் கூறிய எட்டனுள் சிலவற்றை என்பது ஏற்புழிக் கோடல் என்பதனாற் கொள்க. உம்மை எதிர்மறை யாகலான் அவற்றுள் சில நிகழவும் பெறுமெனக் கொள்க.

தொண்டில் திளைத்த தூயவர் சுவைட்சர்

முனைவர் ப. க. பொன்னுசாமி, எம். எஸ்சி., பிஎச்.டி.

புதுமை மனிதர்

இந்தப் பூவுலகின் பரப்பிலேயே வாழ்க்கை நடத்துவதற்குச் சற்றும் ஒவ்வாத சுற்றுப்புறம் ! மனிதனை ஆழ்தூக்கத்தில் அழுத்தி உயிரை உண்டுவிடவல்ல கிருமிகளைச் சுமந்து திரியும் இராட்சத ஈக்கள் ! மலேரியாவைக் கொடுக்கில் மாட்டிக்கொண்டு மொய்க்கும் கொசுக்கள் ! மனிதன் உருக்கொடுக்க உருக்கொடுக்க, உடனுக்குடன் உலைவைத்து விடும் கரையான்கள் ! சாரை சாரையாய்க் கம்பளம் விரித்திடும் காட்டெறும்புகள் ! ஒட்டியணைத்துக் குருதியை உறிஞ்சி விடும் அட்டைகள் ! உச்சியைச் சில்லிட வைக்கும் நச்சுப்பாம்புகள் ! அன்னியர் யாராகிலும் அவர்களின் குரல்வளைகளுக்காகவே வாழ்ந்திடும் காட்டு மனிதர்கள் ! அவர்களைப் பின்னிப் பிணைந்த நோய்கள் ! கறுப்பு மனிதர்களின் அந்தக் காட்டுக் கிராமத்திற்கு ஒரு வெள்ளை மனிதர் வருகிறார்–தம் மனைவியோடு வாழ, மருத்துவப் பணி புரிய !

'தத்துவத்தில் டாக்டர் பட்டம் ; இறையியலில் டாக்டர் பட்டம் ; இசைத்துறையில் டாக்டர் பட்டம் ; இந்தப் பட்டப் படிப்புக்களெல்லாம் கொடுக்கும் பொருளும் சுகவாழ்வும் வேண்டாம் ; கறுப்புமனிதர்களுக்கு வெள்ளை மனிதர்கள் தொடர்ந்து தீங்கிழைத்துக் கொண்டிருக்கிறார்கள் ; அதற்குக் கழுவாய் தேவை ; முப்பது வயதுதானே ஆகிறது? இன்னும் ஐந்தாண்டுகள் மருத்துவம் படிப்பேன் ; ஆப்பிரிக்கக் காட்டுக்குப் போவேன், கறுப்பு மனிதர்களில் ஒருவனாக வாழ்வேன், அவர்களது பிணி, வலி, துன்பம் தீர்ப்பேன்'' என்று உறுதி எடுத்துக்கொண்டு மாணவராகி, மருத்துவராகி ஆப்பிரிக்காவிற்கு வருகிறார் அந்த மனிதர் ! குடிசைதான் மருத்துவமனை ! மனைவிதான் செவிலித்தாய் ! மண்ணெண்ணெய் விளக்கிலிருந்துதான் இரவு வெளிச்சம் ; ஆயிரக்கணக்கான அறுவைச் சிகிச்சைகள் ; கறுப்பு மனிதர்களே கூடத் தொடமறுத்த தொழுநோயாளிகளை, அவர்களது மலம் சிறுநீர் படிந்த படுக்கைகளைத்தானே தொட்டுக்கழுவி, மருந்திட்டு மருத்துவம் புரிகிறார். நாற்பதாண்டுக் காலம் இப்படிப் பணிபுரிந்து உலக வரலாற்றில் ஒரு தனியிடத்தை அவர் பெற்றுக் கொள்கிறார், அந்த அன்புச் செல்வர், தொண்டுத் தோழர்தான்

மாமனிதர் ஆல்பர்ட் சுவைட்சர் ! குழந்தைப் பருவம். அவனது அன்னை கடவுள் வழிபாடு கூறி, அன்பு முத்தமிட்டுப் படுக்கையில் உறங்கப் பணிக்கிறார். அவன் படுத்த கணத்தில் எழுந்து "அன்னையின் வழிபாடு மனிதர்களுக்காக மட்டுமே இருந்ததே ? ஏன் அப்படி ? இறைவனே ! இந்த உலகில் இருக்கும் அனைத்து உயிரினங்களையும் நீ காப்பாற்று, வாழ்த்துக்கூறு, துன்பந்துடை, என்னைப் போன்றே அமைதியாக அவை உறங்கத் துணை செய்" என்று வேண்டி வழிபட்டுப் பின்னர் உறங்கப் போகிறான். முப்பது ஆண்டுகள் கழித்து, ஆப்பிரிக்கா காட்டிலே — அதோ அவரது சிறு விளக்கின் முன்னால் சுற்றிச் சுற்றி வருகிறதே விட்டில் பூச்சி, அதோ அவர் தோண்டிக் கொண்டிருக்கும் ஆழமான குழிக்குள் தவறி விழுகிறதே சிறிய தவளைக் குஞ்சு, அதோ நடைபாதையில் சுருண்டு கிடக்கிறதே கம்பளிப்புழு, அதோ அங்கே பறித்துத் தரையில் போட்டுள்ளார்களே ரோஜா மொக்கு — அத்தனை உயிர்களிடத்தும் அன்புப் போர்வையை எடுத்துக் கொண்டு ஓடோடி வருவார். "தோட்டம் அமைக்கக் காடுகளை நெருப்பிட்டு அழிக்கிறார்களே—எத்தனை உயிரினங்கள் துடிதுடித்து மடியும்?" நெக்குற்று நெஞ்சுருகுவார். வேட்டைக்காரர்களால் துரத்தப்பட்ட நிலையில், மருத்துவக் குடிசையை முட்டிமோதி ஊறு விளைவித்து ஓடுமே காட்டெருமை அதனிடமும் அன்பைப்பொழிந்து அரவணைப்பார். ஏறத்தாழத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் மண்ணில் வாழ்ந்து,

> "எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல்
> எண்ணி உள்ளே
> ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார் யாவர்? அவர்
> உளந்தான் சுத்த
> சித்துருவாய் எம்பெருமான் நடம்செய்யும் இடம் என நான்
> தேர்ந்தேன்"

என்று பாடிப் போந்தாரே வள்ளலார் — அந்த எண்ணத்திற்கு இலக்கணமானவர் ஆல்பர்ட் சுவைட்சர் !

உண்மையைத் தேடுங்கள்

அறியாமை, மூடநம்பிக்கை, குற்றநினைவு ஆகியவற்றைப் போக்கும் மாமருந்து 'உண்மை' தான் என்று கூறுவர். அவர் தம் கையில் பிடித்து அடித்த 'உண்மை தேடல்' என்ற விளக்கின் ஒளிச் சுடரில் மத அமைப்புகளுக்குள்ளே புதையுண்டு கிடந்த பொய்மைகள் கண்கூசித் தடுமாறின. புகழ் பெற்ற இறையியலாளர்களை எல்லாம் அவர் அந்த உண்மை வேட்டல்

விளக்கைக் கொண்டு விரட்டுவார். "உண்மையெனும் மாளிகையை ஐயமென்னும் சேற்றுக்குளத்தில் எழுப்ப முடியாது. நமது ஆன்மீக வாழ்க்கைப் பழம் முழுதும் அழுகிக் கிடக்கிறது—ஏனென்றால் அஃது முழுவதுமாக ஐயக்கதிரால் ஊடுருவப் பட்டுள்ளது. ஆதலால் தான் நமது உலகம் எல்லா நிலையிலும் பொய்மை நிறைந்ததாகவே இருக்கிறது. உண்மைதான் உயர்ந்த சிந்தனைக்கு விதை போட வல்லது. ஆண்டு தோறும் கனிமரம் ஒரே மாதிரியான கனிகளைத் தான் காய்க்கிறது—ஆனாலும் ஒவ்வொரு ஆண்டும் கனிகள் புதியனவாகவே உள்ளன அதே போன்றுதான் நல்ல எண்ணங் களும் சிந்தனையில் தொடர்ந்து தோன்றுகின்றன. ஆனால் இன்றைய காலப் போக்கு எப்படியிருக்கிறது? பட்டுப்போன மரத் தின் நம்பிக்கையின்மைக் கிளைகளிலே 'உண்மை' என்ற கனி களை நூலில் கட்டித் தொங்க விட்டு, ஆகா, கனி, உச்சிக்கனி என்கிறோம்". அவருடைய இந்தச் சொற்கள் போலி வேடதாரி களின் நெஞ்சங்களில் பாய்ச்சிய கூரரணிகளாகும்.

நாகரிகத்தின் உண்மை விளக்கம்

"மனித இனத்தின் வரலாற்றைப் பெரும்பாலும் போர், குழப்பம், அரசியல் சதி, பதவி வெறி போன்ற நிகழ்ச்சிகளின் அடுக்குத்தொடராகவே காண்பிக்கின்றார்கள். ஆனால் அதை ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி வரும் நாகரிகங்களின் தொகுப்பென்று தான் கொள்ள வேண்டும். தனிமனிதனும் சமூகமும் அறத்தோடு சார்ந்த நிலையில் ஆன்மீக, பருப்பொருள் துறைகளில் அடையும் முன்னேற்றங்களையே நாகரிகத்தின் அறிகுறிகள் எனச் சொல்ல வேண்டும். தனிமனிதனுக்கும் அவனைச் சார்ந்தவா களுக்கும் வாழ்க்கைப் போராட்டம் குவித்துச் செல்லும் சுமைகளை இறக்குவதாக நாகரிகம் இருக்கவேண்டும் ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்கி அவர்களது ஆன்மீக வளர்ச்சிக்கும் பருப்பொருள் வளர்ச்சிக்கும் அது வழிகாட்டி அமைய வேண்டும். இயற்கையின் மீதும் மனித முயற்சிகள் மீதும் வலிவான ஓர் ஆட்சியைத் தன்னால் செலுத்த முடிந்தால், நாகரிகம் தனது குறிக்கோளில் வெற்றி பெற முடியும்.

மறுமலர்ச்சிக் காலத் தொட்டுப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை நாகரிகம் வளர்ந்தவிதம் ஆன்மீக ஆற்றலையும் பருப்பொருளாற்றலையும் ஒத்த அளவிலே இணைத்து ஏற்றுக் கொண்ட நிலையில் இருந்தது. பின்னர் எதிர் பாராதது நடந்தது. மனிதனின் ஆன்மீக ஆற்றல் படிப்படியாகக் குறைந்து மறைந்தே விட்டது. பருபொருளாற்றல் எல்லை மீறிப் படர்ந்து வெற்றி

களைக் குவித்தது. இந்த வெற்றிகளின் மகிழ்ச்சியில், மயக்கத்தில் உலக நாடுகள் திளைத்தன. போட்டி போட்டுக் கொண்டு முன்னேறின. அறத்தின் துணையே தேவையில்லையென்ற போக்கிலேயே முன்னேற்றம் கண்டன. எண்ணற்ற வழிகளில் இயல்பான உறவுகளைத் துண்டித்துக் கொண்டு வளர்ந்த இந்தப் போக்கு ஒரு பேயாட்டமாகவே உருவெடுத்து விட்டது. இதன் காரணமாக இன்று மனித நாகரிகம் ஒரு பெரும் சிக்கலில் குழப்பத்தில் சிக்கிக் கொண்டு விட்டது. பேரச்சம் என்றென்றும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஒரு நிலை வந்துவிட்டது. இந்த ஆபத்திலிருந்து மனிதன் விடுபட என்ன செய்ய வேண்டும் ?

உலகப்பார்வை வேண்டும்

குறுகிய மனக்கதவை உடைத்துக் கொண்டு வெளிவந்து, பரந்த ஓர் உலகப் பார்வையை மனிதன் தனது நாகரிகத்தின் உண்மையான அடித்தளம் எனப் பறைசாற்ற வேண்டும். அனைத்துலக மாந்தரும் அறம் என்ற ஒளியில் பார்த்தால்தான் அந்த உலகப் பார்வை முழுவதும் தெரியும். இதற்கான ஒரு புதிய நம்பிக்கையை, ஒரு புதிய உறுதியை உலக மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இது எப்போது இயலும் ? எப்படி இயலும் ? நாம் கப்பலில் பயணம் செய்ய வேண்டும். செய்கிறோம். அந்தப் பயணத்தின் முடிவு, கப்பல் வேகமாகச் செல்கிறதா, சற்று மெதுவாகச் செல்கிறதா என்பதைப் பொறுத்து இல்லை ; காற்றால் தள்ளப்படுகிறதா, நீராவியால் உந்தப்படுகிறதா என்பதைப் பொறுத்தும் இல்லை ; வழியை நெறிப் படுத்தும் சக்கரம் சரியாக இயங்குகிறதா என்பதைப் பொறுத்துதான் இருக்கிறது. வீழ்ச்சியுற்று விட்ட மனித நாகரிகம் மீட்சிப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். அதற்கு அறம் வேண்டும். அறம்தழுவிய உலகப் பார்வை வேண்டும். தனி மனிதன் ஒவ்வொருவனும் தனக்குத்தானே அறந்தழுவிய, நிலைபிறழாத, உலக ஏற்பு, வாழ்க்கை ஏற்புக் கொள்கையைக் கடைப்பிடித்து வாழ முன்வரவேண்டும். இந்த உலகப் பார்வையின் ஆணிவேர் ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கைக்கு மதிப்பளித்து வாழுவோம் என்று எடுத்துக் கொள்ளும் உறுதி மொழிதான்.

வாழ்வில் மதிப்பு வையுங்கள்

வாழ்வின் மதிப்பு என்பது வாழ்வில் விருப்பம் கொள்ளும் தன்மைதான். வாழ்வின் மதிப்பு என்ற அடிப்படையில் அமைந்த உலகப் பார்வையானது அனைத்து உயிர்களையும் தழுவிய ஒருவகை இரகசிய உள்ளுணர்வைச் சார்ந்ததாகும். இந்த

உள்ளுணர்வுக்குத் தன்னை ஒருவன் ஆட்படுத்திக் கொண்டு விட்டால், தனது ஆன்ம, அறநெறிச் செயல்களில் மனநிறைவு பெறுவதோடு, உலகில் இருக்க வேண்டிய ஆன்மீக மற்றும் பருப் பொருள் முன்னேற்றங்களுக்கும் வழிகாட்டியாக அமைந்து விடுவான்.''

ஆல்பர்ட் சுவைட்சர் காட்டும் இந்த வழியில் வர எத்தனை பேர் தயாராக உள்ளார்கள் ? யாரும் வருகிறார்களோ இல்லையோ ஒன்று மட்டும் உண்மை : இன்றைய உலகின் எல்லாக் குழப்பங் களுக்கும், பேரா மூட்டங்களுக்கும், துயரங்களுக்கும் அவர் கூறும் உலகப்பார்வை மங்கிப் போயிருப்பதுதான் காரணம் என்பதை எல்லோரும் உணர்ந்து தான் உள்ளார்கள். இல்லையானால் நமது கவிஞர் ஒருவர் இப்படி வெடிக்கமாட்டார் :

சூனியக்காரரே ! விஞ்ஞான தீபத்தில்
மாணிக்கத் தாலியை எரிக்கும் மூடரே !
ஆத்திரம் எங்களைப் பைத்தியம் ஆக்குமுன்
எங்கள் பாப்பாக்கள் நீலமாய்ப் பிறக்குமுன்
புல்லிதழில் விஷமுத்துக்கள் வியர்க்குமுன்
செல்வப் பசுமடியில் மரணம் சுரக்குமுன்
அரும்பு உதடுபிரிக்கும் பச்சைமண் முற்றத்தில்
கரிக்கோலமிடும் அணுக் குண்டர்களே !
விரிவது நிற்கட்டும்
விரிவது நிற்கட்டும்
ராட்சத
நாய்க்குடைக்
காளான் ... !

சிந்தனையின் பயன்

இஸ்லாமியப் பெரியவர் ஒருவர் எப்போதும் குரானைப் படித்துக்கொண்டேயிருப்பார். அவரைச் சில இளைஞர்கள் கேலி யாகப் போவார்கள். ஒருமுறை அவரைக் கேட்டார்கள் : ஐயா பெரியவரே, எப்படியோ முழுக்குரானும் உங்களுக்கு மனப்பாடமாகி விடும். இதையே எப்போதும் படித்துக் கொண்டிருக்கின்றீர்களே, சலிப்பாக இல்லையா ?—' என்று. பெரியவர் சொன்னார் : தம்பிகளே, எனக்கு இந்தக்குரான் எப்போதும் ஒரே நூலாகப்பட வில்லை; நான் சிறுவவனாக இருந்தபோது, அதை ஒரு மாணவன் என்ற நிலையில் அறிந்தேன். இப்போது நான் முதிய வயதில்

படித்துக் கொண்டிருக்கிறேன். குரானை நான் தொடர்ந்து திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டிருக்கிறேன்— ஏனென்றால் ஒவ்வொரு முறை படிக்கும்போதும் அதிலிருந்து நான் புதிய புதிய செய்திகளைப் பெறுவதாகவே உணர்கிறேன்.''

மனிதன் சிந்தனையாளனாய் இருப்பதன் பயன் இதுதான். நல்ல ஆழ்ந்த சிந்தனைகளின் உதவியால், உயிரற்ற, முழுமையில்லாத அன்றாட உலக நடப்பதையும் தாண்டி, மனிதன் தனது வாழ்வைச் சீர்படுத்திக் கொள்ள முயலவேண்டும். எந்த ஒரு நிலையிலும் ஒரு முழுமையை நோக்கி மனிதன் செயல்படவேண்டும். பூத்துக் குலுங்கும் மலர்களைப் பாருங்கள்! துள்ளித் துள்ளிப் பாய்ந்து நீச்சலடித்து வாழும் மீன் குஞ்சுகளைப் பாருங்கள்! பூமிக்குள் புதைந்திருக்கும் படிகக் கற்களைப் பாருங்கள்! ஒவ்வொன்றிலும் ஒரு முழுமை இருக்கிறது. மனிதனும் தனது வாழ்க்கையை ஒரு முழுமையாக்கச் சிந்திக்க வேண்டும். இயற்கையை உலக நடப்பைக் கூர்ந்து நோக்க நோக்க ஓர் உண்மை வெள்ளிடை மலையாகும்.

''உலகிலே உயிர் இருக்கிறது, வாழ்க்கை இருக்கிறது, நாம் அனைத்து உயிர்களோடும் ஒருவிதத்தில் இணைக்கப்பட்டுள்ளோம். நமக்காக மட்டும் நாம் இனி வாழ முடியாது. வாழ விரும்பி நிற்கும் பல உயிரினங்களுக்கு இடையில் ஒரு பகுதியாகத் தான் நாம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்'' — என்பதுதான் அந்த உண்மை. மனிதன் தன் வாழும் விருப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டால் தான் இயற்கையாகவும், நாணயமாகவும், நாகரிகமாகவும் செயற்பட முடியும். அப்போதுதான் வாழ்க்கை உறுதியானது என்ற உள்ளுணர்வைப் பெற முடியும். அந்த உள்ளுணர்வுதான் வாழ்க்கைக்கு ஒரு மதிப்பைக் கொடுக்கும் தனது வாழ்வை மதிக்கத் தொடங்கிவிட்டால், பிற உயிரினங்களின் வாழ்வையும் மதிக்கும் சிந்தனை வந்துவிடும்.

உயிரைக் காப்பதையும், வளர்ப்பதையும் அதை உயர்ந்த மதிப்பிற்கு எடுத்துச் செல்வதையும், நற்செயல்கள் எனக் கொள்ள வேண்டும். உயிரை அழிப்பதை, அதற்கு ஊறு விளைவிப்பதை, அதை அமுக்கித் துன்பம் கொடுப்பதைத் தீச்செயல்கள் எனக் கொள்ளவேண்டும். இந்த நல்லது-தீயது வேறுபாடுதான் மனித வாழ்வின் உண்மையான அடிப்படை நீதித் தத்துவமாகும். இந்தத் தத்துவம் தான் வாழ்க்கையில் ஒரு ஈடுபாட்டைக் கொடுக்கும். அந்த ஈடுபடுபாட்டைத் தவிர வேறு எதற்கும் வாழ்க்கையை முழுமையாக்கும் வலிமை கிடையாது.

இன்றைய மனிதனைப் பாருங்கள்! அவனை விரட்டித் துரத்தும் கேள்வி எது? "நான் உயிர் வாழ்ந்துதான் ஆக வேண்டுமா?" என்பதுதான். நேற்று அறிவாளியாக மகிழ்ச்சியோடு வாழ்வின் உச்சக்கட்ட இனிமையில் இருந்த எனது நண்பன், இன்று திடீரென்று உயிரை மாய்த்துக் கொண்டானே, ஏன்? "இப்படித் தனது வாழ்வை ஒருவன் முடித்துக் கொள்ளும்போது, தன்னுடைய வாழும் விருப்பத்தையும் அழித்துக் கொள்கிறான். ஆனால் இப்படி வாழ்வை முடித்துக் கொண்டவர்களைப் பார்த்து நாம் பெரிதும் வருந்துகிறோமே, ஏன்? ஏனென்றால், மரணத்தைக் கண்டு நாம் அஞ்சுகிறோமோ இல்லையோ, உயிருக்கு, வாழ்வுக்கு மதிப்புக் கொடுக்கிறோம் என்பதால்தான்.

மரணமென்ற முடிவு நம் கண்ணுக்கு முன்னால் நிற்கிறது—அதன் முன்னோடிகளான நோயும், துன்பமும், வலியும் நம்மை அவ்வப்போது துரத்துகின்றன. அவற்றிற்குப் பயந்து மனிதன் வாழும் விருப்பத்தை விட்டு, வாழ்வைத் துறக்க விருப்பம் கொண்டால் — அது வாழ்க்கைத் தத்துவத்திற்கே முரண்பாடாகி விடும். அப்போது மனிதன் உயிர்வாழும் நிலையையே ஏதோ இயற்கைக்கு அப்பாற்பட்டதாகவும், ஏதோ அது உண்மையற்றதாக வும், அதை முழுமை பெறச் செய்ய முடியாததாகவும் உருவகப் படுத்தி விடுகிறான். இந்த அடிப்படையில் தான் வாழ்க்கையைச் சில சிந்தனையாளர்கள் முன்வைத்து வாழ்கின்றனர். இவர் களுடைய வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கும் இந்தக் கொள்கை யானது உலகிலிருந்து படுப் பொருளமைப்பையே இல்லாமற் செய்தால்தான் நிலைத்து நிற்கும். இதில் எனக்கு உடன் பாடில்லை.

அண்டம் என்று தோன்றியது? எப்படி அது ஒரு கட்டுக்குள் இயங்குகிறது? அதில் நிகழ்ச்சிகளெல்லாம் எங்ஙனம் நடை பெறுகின்றன? இவற்றை யெல்லாம் நமது அறிவால் இன்னும் முழுமையாகக் காண முடியவில்லை, இருந்தாலும் என்ன? வாழ வேண்டுமென்ற விருப்பம் எங்கும் உள்ளது. இதைத் தெளிய வைக்க எந்த அறிவியலும் தேவையில்லை." சுவைட்சரின் இந்த வாழ்க்கைத் தத்துவம் பொருள் பொதிந்ததாகும்.

கலை என்பது என்ன?

"உள்ளார்ந்த எண்ணங்களின் ஒருங்கிணைந்த வெளிப் பாட்டைத் தான் நாம் கலையென்று சொல்லுகிறோம். இந்த எண்ணக் கோவையை எவ்வளவுக்கெவ்வளவு ஒருவன் அழுத்தமாக வும், வேறுபாடுள்ளதாகவும், உன் மனதுக்கு ஒத்தும் மாறுபட்டும்

வெளிப்படுத்துகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனது கலை அழகாக ஆழமாக இருக்கும். பார்த்தோம், கேட்டோம், உணர்ந்தோம், என்ற நமது மிக எளிய அன்றாடச் செயற்பாடுகளிலிருந்தும் பெரிதும் வேறுபட்டு, கற்பனைச் செழிப்பான உணர்வுகளை உள்ளத்தில் தூண்டவல்ல ஒரு படைப்பைத்தான் நாம் உண்மைக் கலையென்று கூறுகிறோம். ஒரு கலைப்படைப்பை வெளிக்கொணரப் பயன்படுத்தப்படும் பொருளைக் கொண்டுதான் மனிதன் கலைகளை வகைபிரிக்கிறான். தொனிகள் வாயிலாகத் தன் படைப்பை வெளிப்படுத்துபவனை இசையாளன் என்கிறோம். வண்ணங்களைப் பயன்படுத்திப் படைப்பவனை ஓவியன் என்கிறோம். சொற்களால் தோரணம் அமைப்பவனைக் கவிஞன் என்கிறோம். இந்தப் பிரிவினை மேற்போக்கான ஒன்றுதான். ஓர் உண்மையான கலைப் படைப்பாளி ஓவியனாகவும், கவிஞனாகவும், இசையாளனாகவும் ஒருங்கிணைந்த குணம் படைத்தவன் தான். ஒருவனிடம் ஓவியக் கூறு கொஞ்சம் தலைதூக்கி நிற்கும். இன்னொருவனிடம் கவிக்காதல் தலைதூக்கி நிற்கும். மற்றொருவனிடம் இசைக்குணம் ஏற்றம் காட்டும். அவரவர்கள் தத்தமக்கேற்ற பொருட்களைக் கொண்டு படைப்புக்களை ஆக்குகிறார்கள். எங்கே, "பார்க்க மட்டும் செய்வேன் — கேட்க மாட்டேன், கேட்க மட்டும் செய்வேன் — பார்க்க மாட்டேன்" என்று செயற்பட முயன்று பாருங்கள்? தோற்றுப் போவீர்கள்! வேண்டாமென்று ஒதுக்கப்படும் உணர்வு ஊற்றுப் பெருக்காய்ப் பீச்சித் தன்னை வெளிப்படுத்திக் காட்டிவிடும்.

வரலாற்றைப் பாருங்கள்! கோதே, மைக்கல் ஏஞ்சலோ, கெல்லர், தெய்னே, கெய்னி, பாக்லின் போன்ற மாபெரும் கலைஞர்களையெல்லாம் கவிஞர்களாக மட்டுமோ, ஓவியர்களாக மட்டுமோ தனிமைப்படுத்திவிட முடியாது. ஓவியம் கவிதைப் பண்பால் உயர்வுபெறுகிறது. கவிதை ஓவியச் சாயலால் உயர்வு பெறுகிறது. ஒரு கால கட்டத்தில் நாம் காணும் இந்தக் கலைகளின் சிறப்பு அவை ஒன்றையொன்று தழுவிய நெருக்கத்தை அல்லது ஒதுக்கிய இடைவெளியைப் பொறுத்தே அமையும்.

கலையைச் சுவையுங்கள்

புகழ்பெற்ற ஓவியர் டைடியர் போகெட்டின் மலர்க்குவியல் ஓவியத்தைக் காணும்போது அதில் மொய்க்கும் வண்டுகளின் ரீங்காரத்தை ஒருவன் கேட்கவில்லையென்றால் அவன் சுவைஞனே ஆகமாட்டான். வானுயர வளர்ந்த மரக்கூட்டத்தை ஓர் ஓவியத்தில் காண்கிறோம்; அம்மரங்களின் உச்சியில் காற்றிலே அசைந்து

அவை இசைக்கும் இனிய ஒலியை நாம் கேட்கவில்லையானால்— நமது கலையுணர்வின் ஆழம் பொய்ம்மையானதுதான்.

இசைக்கலை நுண்ணிய சிறப்புப்பெற்றது. வேறு எந்தக் கலையைக் காட்டிலும் இசைக்கு ஒழுங்கின் தேவை அதிகம். இசை வெளியுலகை முன் வைப்பதில்லை. அது கண்ணுக்கு புலப்படாத ஓர் உணர்வுலகின் படிமத்தை வெளிப்படுத்துகிறது. அதை ஒருமித்த முழுமையான ஒழுங்கோடு வெளிப்படுத்த வேண்டும்— இல்லையேல் அது பதராகிவிடும்—காலவெளிச்சத்தில் வண்ணம் போய் மங்கி விடும். உற்று நோக்கினால் இசை பற்றிய உண்மை இப்படித்தான் புலப்படும்: இசையென்பது கவிதைப் பண்பையும் ஓவியப் பண்பையும் தன்னுள்ளே அடக்கி ஒரு சீரிய கட்டுப் பாட்டுக்குள் வெளிப்படும் இனிய இயைபாகும். எந்தக் கலைப் படைப்பும் தனக்கென ஒரு முழுவெளிப்பாடு கிடைக்கும் வரை உருப்பெற்றுவிடாது. கவிதையிலாகட்டும், ஓவியத்திலாகட்டும், இசையிலாகட்டும் இந்தப் படிமம் தான் மாறுதது, சிறந்தது என்று கொள்ளுமளவிற்கு ஏதுமில்லை. ஒவ்வொரு கலைஞனுக்குள்ளேயும் மாறுபட்ட இன்னொரு கலைஞன் வாழ்ந்து கொண்டேயிருப்பான்: ஒளிந்துகொண்டே அவன் ஒருபோது ஒருவகை எண்ணத்தையும், மறுபோது வேறொரு வகை எண்ணத்தையும் கிளறிக்கிளறி வேடிக்கை காட்டுவான். எனவே கலையென்பது ஓவியத்தில் மட்டுமோ, கவிதையில் மட்டுமோ இல்லை—அம்மூன்றும் இணைந்து ஓர் உருவத்தை உண்டாக்கும்போதுதான் உண்மைக் கலை பிறக்கிறது.''

மருத்துவம் அன்றாட வேலை அவருக்கு. அதை உடல் வருந்திச் செய்தார். ஆனாலும் அவருடைய உள்ளம் அவ்வப்போது சிறகடித்துப் பறந்து கலைச்சோலைகளை வலம் வரும். அந்த வலங்களின்போது சேகரித்துப் போந்த பழச்சாற்றுக் கருத்துக்கள் தாம் மேலே கண்டவை.

மாமனிதர் ஆல்பர்ட் சுவைட்சர்

ஆல்பர்ட் சுவைட்சர் ஜெர்மனியில் பிறந்து வளர்ந்து, ஆப்பரிக்கக் காட்டில் லாம்பரின் என்ற கிராமத்தில் நாற்பது ஆண்டுகள் கருப்பு மனிதர்களுக்கு மருத்துவம் புரிந்து 1965-ஆம் ஆண்டில் அங்கேயே மாண்டவர். அறிவுக்கடலாகவும், ஆழ்ந்த சிந்தனையாளராகவும், துன்பந் துடைப்பவராகவும், இசைப் பாடகராகவும், உண்மையைத் தேடி அலைந்தவராகவும், வாழ்க்கை வாழ்வதற்கே என்று அறைகூவல் விடுத்தவராகவும்,

உயிர்களிடத்தில் அன்பு காட்டும் அறமே உலகைக் காக்கும் வழியாகும் என்று கூறித் தாமே ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்து போனவர் ஆல்பர்ட் சுவைட்சர். அவருடைய வாழ்வும் சிந்தனையும் மனித இனத்தின் போக்கை நீண்ட காலத்திற்குத் தாக்கி நிற்க வல்லவை ஏன், அவை மனித இனத்தை வெகுகாலம் வரை அழிவுப் பாதையிலிருந்து விலக்கி நின்று காக்க வல்லனவாகும்.

ஊருக்கு உழைத்திடல் யோகம்—நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும் உளம் பொங்கல்
இல்லாத அமைதி மெய்ஞ்ஞானம்

என்றார் பாரதியார்

இந்த யோகத்தையும், யாகத்தையும், மெய்ஞ்ஞானத்தையும் பெற்றுத் திகழ்ந்தவர் ஆல்பர்ட் சுவைட்சர்.

வாய்ப்புற்றுக்கு வைட்டமின் - ஏ

ஆசியாவில், அதிலும் குறிப்பாக, இந்தியாவில், வெற்றிலை மென்று மகிழ்வோர் லட்சக்கணக்கில் உள்ளனர். அடிக்கடி வெற்றிலையை வாயில் குதப்பிச் 'சுகம்' காண்போர் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். இந்த வெற்றிலை தின்னும் பழக்கத்தால் இவர்களில் பலருக்கு வாய்ப்புற்று ஏற்படுகிறது இந்த நோயிலிருந்து இவர்களைக் காப்பாற்றுவதற்கு வைட்டமின் 'ஏ' சத்து உதவுகிறது என்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வாய்ப்புற்று நோயாளிகள் தங்களின் நம்பிக்கை நட்சத்திரமான இந்த வைட்டமின் 'ஏ' சத்து நிறைந்த பொருள்களை அதிகம் உட்கொள்வது நல்லது.

நன்றி : அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள்

— டாக்டர் இ சுந்தரமூர்த்தி

மீட்சி இயக்கம்

பழந்தமிழ்ச் சுவடிகளைப் போற்றிப் பாதுகாத்திருப்பின் தமிழ் இலக்கிய வரலாறு இன்னும் முழுமை பெற்றிருக்கக்கூடும். கால வெள்ளத்திற்குப் பல்வேறு பழஞ்சுவடிகள் இரையானமையால் உரையாசிரியர்களின் கூற்றால் தெளியப்பெறும் பல்வேறு நூல்களும் இன்றும் பெயரளவிலேதான் உலவி வருகின்றன. பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே கிடந்து, நெருப்பிலே நீரிலே பயின்ற பாவை தமிழ் மகள் என்பர். ஆனால் காலந்தோறும் நெருப்பிலும் நீரிலும் மடிந்த சுவடிப் பாவைகள்தாம் மிகப் பலவாயின. அழிவி னின்றும் தப்பிய சுவடிகள் பலவும் இன்று தமிழகத்தை விட்டுத் தொலை தூரங்களிலும், வெளிநாடுகளிலும் உள்ளன. இவற்றை யெல்லாம் தக்கவாறு வெளிப்படுத்திக் கொணரும் 'மீட்சி இயக்கம்' இன்றைய சூழலில் மிக இன்றியமையாதது ஆகும்.

விவரப்பட்டியல்

பாரிசு, லண்டன், ரோம், லிஸ்பன், கோப்பன்ஹாகன் முதலிய பல்வேறு வெளிநாட்டு நகர நூலகங்களில் போற்றிப் பாதுகாக்கப் பெற்றுவரும் தமிழ்ச் சுவடிகளின் விவரப் பட்டியல்களையும் தமிழகத்திலும் இந்தியாவில் பிற இடங்களில் காணப்பெறும் சுவடி களையும் தொகுத்து வெளியிடுவது சுவடி இயக்கத்தின் முதற் பணியாக அமையும். அண்மையில்தான் இத்தகைய சுவடித் தொகுப்புகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இப்பணிகளை ஒருங்கிணைத்துப், விரிவாக்கியும் விரைவிலும் செயற்படுவது மிக இன்றியமையாததாகும் அவ்வப்பொழுது சிறுசிறு தொகுப்புகள் வெளிவந்துள்ளன. எனினும், இவற்றையெல்லாம் ஒன்று திரட்டி *'உலகத் தமிழ்ச் சுவடிகளின் விவரப்பட்டியல்'* ஒன்றினை விரிவாக வும் விளக்கமாகவும் விரைவாகவும் அமைப்பதற்கு ஆவன செய்தல் தமிழுக்கு உரிய வளர்ச்சியினைத் தரும். அவ்வகையில் சுவடிக் கருத்தரங்குகள் உரிய பயனை நல்குவதோடு முறையான சுவடி ஆராய்ச்சிகளுக்கும் வழிவகுக்கும் எனலாம். கல்கத்தா தேசிய நூலகத்தில் உள்ள தமிழ்ச்சுவடிகளைப் பற்றிய செய்திகளை இக் கட்டுரை ஆராய்கின்றது.

கல்கத்தாத் தேசிய நூலகம்

தேசிய வரலாற்றுப் பெருமை பெற்ற கல்கத்தா நூலகம் வைசிராய்கள் வசித்த பெருமாளிகையாகும். மிக அழகிய அமைப் புடன் விளங்கும் இப்பெருமாளிகையில் 1948-ஆம் ஆண்டு இந் நூலகம் தொடங்கப் பெற்றது. இந்திய நாட்டில் வழங்கும் எல்லா மொழிகளுக்கும் உரிய நூல்களை இந்நூலகம் தொகுத்து வைத்திருப்பது குறிப்பிடத்தகுந்ததாகும். தமிழ் நூல்கள் பலவற்றை யும் சொந்தமாகத் தொகுத்து வைத்திருந்த தமிழறிஞர் பலரும் இந்நூலகத்திற்குத் தங்களுடைய தொகுப்புகளை வழங்கியுள்ளனர்.

நூலகத் தமிழ்ப் பகுதி

தமிழ்ப் பகுதிக்குக் கிடைத்த பெரிய நன்கொடை பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் தொகுத்து வைத்துப்போற்றிய நூல்களும் பழஞ்சுவடிகளுமாகும். பேராசிரியர் மறைந்த பின் அவர்கள் தொகுத்து வைத்த அச்சு நூல்கள், சுவடிகள் அனைத்தை யும் அவர் தம் கால்வழியினர் 1960-ஆண்டில் இந் நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினர். பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் தொகுப்பிலுள்ள 4500 க்கு மேற்பட்ட நூல்கள். (தமிழ் 2943 ; ஆங்கிலம் பிரெஞ்சு ஜெர்மன் நூல்கள் 1543 ; சமஸ்கிருதம் 113 ; மலையாளம் 16) இந்நூலகத்தில் அவர் தம் பெயரமைந்த பேழையில் தொகுத்து வைக்கப்பெற்றுள்ளன. 1. இவற்றோடு பேராசிரியர் அவர்கள் அவ்வப்போது தொகுத்து வைத்திருந்த பற்பல குறிப்புகள், அகராதிகள், சிற்சில நூல்களுக்கு ஏடு பார்த்து எழுதிவைத்த காகிதப் பிரதிகள் ஆகியவையும் உள. இவற்றையெல்லாம் முறைப்படி தொகுத்து ஆராய்ந்து பதிப்பித் நூரால் பல அறிய செய்திகள் கிடைக்கக்கூடும்.

பழஞ்சுவடிகள்

பேராசிரியர் தொகுத்து வைத்திருந்த சுமார் 340 க்கும் மேற்பட்ட சுவடிகள் இந்நூலகத்தில் நன்கு பாதுகாத்து வைக்கப் பெற்றுள்ளன. இத் தொகுப்பில் சங்க நூல்களிலிருந்து பிற்காலப் பிரபந்தங்கள் வரை பல்வேறு அரிய சுவடிகள் உள. ஒரு சுவடி யிலேயே வேறு நூல்கள் சேர்ந்து அமைந்துள்ள சுவடிகளும் பலவாகும். இவற்றையும் தனித்தனியே நன்கு பிரித்து நோக்கினால் சுவடிகளின் எண்ணிக்கை இன்னும் மிகுதியாகக் கூடும்.

நூலகத்தில் உள்ள தமிழ்ச் சுவடிகளின் விவரங்கள் :

நிகண்டுகள்

திவாகரம், பிங்கலம், ஆசிரிய உரிச்சொல் நிகண்டு, சூடாமணி நிகண்டு, அகராதி நிகண்டு, ஆகிய நிகண்டு முதலாய பல்வேறு நிகண்டுச் சுவடிகளும் இத்தொகுப்பில் உள்ளன. இங்குள்ள நிகண்டுச் சுவடிகளுள் திவாகரச் சுவடிகள் மட்டும் 27 உள்ளன. தமிழ்நாட்டுச் சுவடி நிலையங்கள் எல்லாவற்றிலும் உள்ள ஏடுகளைச் சேர்த்து நோக்கினாலும் கூட இந்தத் தொகையை எட்டாது என்பர். இவற்றுள் முற்றும் முழுமை நிலையில் உள்ள ஏடுகள் 17. ஒரு சில தொகுதிகள் குறைவுபட்டுள்ளன. பேராசிரியர் தம் கைப்படப் பாட பேதக் குறிப்புடன் பிரதி செய்து வைத்துள்ள பிரதி ஒன்றும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை அனைத்தும் திவாகர ஆய்வுப் பதிப்பிற்குத் துணையாய் அமையும்.

பிங்கலம் முதலிய ஏனைய நிகண்டுகளாக மொத்தம் 38 சுவடிகள் உள்ளன. இவற்றுள் பல்பொருட் சூளாமணி, விரிவு பொருள் நிகண்டு ஆகியவை அச்சிடப் பெறாதவை எனலாம்.

பல்பொருட் சூளாமணி

அகராதி நிகண்டு போல் அகர வரிசையில் அமைந்துள்ளது. 'வெம்மையெனும் பெயர் விருப்பும் உட்டணமும்' என்னும் நூற்பா வோடு இந்நூல் முடிவுறுகிறது. மொத்தம் 67 ஏடுகள் கொண்ட ஒரு பகுதியும் 59 ஏடுகள் கொண்ட மற்றொரு பகுதியும் இச்சுவடி யில் அமைந்துள்ளன. இவற்றை ஆராய்ந்து பதிப்பிடலாம்.

விரிபொருள் நிகண்டு :

மொத்தம் 142 ஏடுகளைக் கொண்ட இச்சுவடி நல்ல நிலையில் உள்ளது. முழுமையாகவும் உள்ளது. சுவடியின் இறுதியில் 'ஒலி பற்றிய பெயர்த்தொகுதி கவிதை பதினெட்டாகுமே' என முடிகிறது. 'ஆகத்தொகுதி 10-க்குச் செய்யுள் 283' எனக் குறிப்பிடப்பட்டுள்ள தால் இந்நிகண்டு பத்துத் தொகுதிகளைக் கொண்டதாக அமைந்தது எனலாம்.

அகராதிகள்

இத் தொகுப்பில் குறிப்பிடத் தக்கவை அகராதிகளாகும். வீரமாமுனிவர் எழுதிய சதுரகராதி ஏடுகளும் உள. பதிப்பித்த நூலைப் பிரதி செய்து எழுதிய ஏடுகளும் உள்ளன. அவற்றுள் ஒன்றின் குறிப்பு வருமாறு.

"வீரமாமுனிவர் செய்த சதுரகராதியில் தொகையகராதியை எழுதத் தரங்கபுரம் சண்முக கவிராசர் அவர்களால் பார்வை யிடப்பட்டு சிந்தாதிரிப்பேட்டை நெல்லுமண்டி வெங்கட்டராம முதலியார் அவர்கள் புத்திரராகிய கேசவ முதலியார் அவர் களால் பதிப்பிக்கப்பட்டது.

இக்குறிப்பினால் நூலைப் பார்த்து ஏட்டில் எழுதிவைக்கும் வழக்கம் இருந்தமை புலனாகும். சாலிவாகன ஸ்ரீ 1770– இல் நிகழ்கின்ற கீலக ஹ (கி. பி. 1848) என்னும் காலக் குறிப்பும் இச்சுவடியில் காணப்படுகின்றது.

அகராதி 68 (இவ்வெண் கல்கத்தா நூலகக் குறிப்பு ஆகும்) என்னும் எண் குறிக்கப் பெற்றுள்ள இச் சுவடியில் 278 ஏடுகள் உள்ளன 'அகரம் நாதமாத்திரையியல்பால் பிறந்த அகரம்' எனத் தொடங்கி 'வௌவல் கொள்ளையிடல் பிடித்தல் வாருதல்' வரை உள்ளது. 'பிள்ளைக்கணி பிள்ளையவர்கள் குமாரர் ஆதிநாத பிள்ளை அகராதி மேற்படியான் மகன் இளையவன் பெரிய திருவடிப்பிள்ளை எழுதினது. அகராதி வைத்தியலிங்கன் பிள்ளை ஏடுபார்த்து எழுதினது' என்னும் இறுதிக் குறிப்பு ஏட்டின் தலை முறையைச் சுட்டும். அவ்வாறே ஏடு பார்த்து எழுதும் நெறியை நாட்குறிப்புப் போலச் சுவைபட எழுதிய குறிப்பு ஒன்றையும் ஏட்டின் இறுதியில் காணலாம்.

"1103 ஹூ சர்வசித்து ஹூ தை மீ 7 வெள்ளிக்கிழமை பூர்வபட்சம் திருவோண நட்சத்திரம் பகல் கும்ப லக்கினத் தில் தொடங்கியெழுதினது. மேற்படி வருஷம் மாசி மீ 12 வெள்ளிக்கிழமை பூர்வ பட்சம் கார்த்திகை நட்சத்திரம் பகல் கும்ப லக்கினத்தில் பெரிய திருவடி மேற்படி அகராதியை எழுதி நிறைவேறினது. இந்த அகராதியை நான் 1104 ஹூ பங்குனி மீ 19 வெள்ளிக்கிழமை ரேவதி நட்சத்திரம் துலாலக்கின முதல் பிழை பார்த்து உயிர் எழுத்து உயிர்மெய் எழுத்து ஒற்றெழுத்து இதுகளில் மொழிக்கு முதல் எழுத்துகளும் நூதனம் எழுதி 1104 ஹூ பங்குனி மாதம் 14 உ வெள்ளிக்கிழமை எழுதி முடிந்தது. ஆழ்வார் திருவடிகளே சரணம். இன்னும் பிழைதீர வேண்டியது உண்டு"

இக்குறிப்பில் எழுதத்தொடங்கிய நாள், முடிவுற்ற நாள், பிழை பார்க்கத் தொடங்கிய நாள் முடிவுற்ற நாள் அனைத்தும் வெள்ளிக் கிழமை எனச் சுட்டப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே 'இன்னும் பிழை தீர வேண்டியது உண்டு' என்னும் குறிப்பு அவர் தம் பிழை தீர்த்தலின் வேட்கையைக் காட்டும்.

சதுரகராதியினின்றும் வேறுபட்ட ஓர் அகராதி ஏடும் (72) இத்தொகுப்பில் உள்ளது. 'அகக்காழ் – உள்வயிரம்' எனத் தொடங்கி வெளவியம்–துன்பம் 'என்பதுவரை இருப்பதால் இது முழுமைபெற்ற அகராதியாய் இருக்கக்கூடும். இன்னொரு ஏடான (71) ஸ்ரீமன் நாராயணன்' எனத் தொடங்கி 'முக்கோடம்' வரை எழுதப்பெற்றுள்ளது. இவற்றையெல்லாம் நேரில் நன்கு பரிசோதித்து அச்சிட ஏற்பாடுகள் செய்தல் நலம்.

விகடப்பிரசங்கப் பழமொழி

'விகடப் பிரசங்கப்பழமொழி' என்னும் இவ்வேடும் பழமொழி களைத் தொகுத்துத் தருகின்றது. அகர வரிசையில் ஒவ்வொரு எழுத்துக்குரிய பழமொழிகளும் தனித்தனியே பிரிந்துஏட்டில் எழுதப் பெற்றுள்ளன. 'அகங்கண்டது புறஞ் சொல்லாதே எனத் தொடங்கி 'வைத்த பண்டம் பாாத்து வயிறெரிந்து நின்றது போல' என்னும் பழமொழியோடு நிறைவுபெறுகிறது. இப்பழமொழித் தொகுப்பின் தலைப்பே புதுமையாக உள்ளது. பெயரிலிருந்தே வேடிக்கையாகச் சொற்பொழிவு செய்வாருக்கு இது மிகவும் பயன் படும் என ஊகிக்கலாம். முழுமையாகவும் நல்ல நிலைமையிலு முள்ள இச்சுவடிகளை ஆராய்ந்து பதிப்பிக்க வேண்டும்.

இச்சுவடிக்கட்டில் மற்றும் ஓரு பழமொழித் தொகுப்பு உள்ளது 'அகப்பை சுவை அறியுமா ?'எனத் தொடங்கிக்குருடனாடு மேய்க்க' என்பதோடு முடியும் இவ்வேடு முழுமையாக இல்லை. இத் தொகுப்பில் 'அசுர குலம அழிவதேன் அரிவையர் துணி கிழிவதேன்' எனத் தொடங்கும் இரு சொல்லலங்காரம் என்னும் நூலும் அகர வரிசையில் அமைந்துள்ளதாகத் தெரிகின்றது.

இலக்கண நூல்கள்

தொல்காப்பியம், நேமிநாதம், நன்னூல் வீரசோழியம், யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், அகப்பொருள், இலக்கண விளக்கம், பிரயோக விவேகம், நவநீதப்பாட்டியல், அணி யிலக்கண வினாவிடை முதலான பல ஏடுகள் இந்நூலகத்தில் உள்ளன.

இலக்கண நூல்களிள் பழமையான தொல்காப்பியத்திற்கு மூல ஏடு ஒன்றும் உரை ஏடுகள் 9-ம் உள்ளன. இளம்பூரணர் உரை ஏடுகளில் எழுத்ததிகார உரை ஏடுகள் 3, சொல்லதிகாரம் 1 பொருளதிகாரம் 1. தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணர் உரைக்கு ஆதாரமான ஏடு தமிழ் நாட்டிலேயே இஃது ஒன்றுதான் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இதனை வ.உ. சிதம்பரம்

பிள்ளையவர்களும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களும் முதன் முறையாகச் சென்னை வாவில்லா ராமசாமி சாஸ்துருலு அண்டு சன்ஸ் வாயிலாக 1936 இல் வெளியிட்டனர் என்பர்.[2] எனவே தொல்காப்பிய இளம்பூரணர் பொருளதிகார ஏட்டைப் பெற்றிருக்கும் தனிப்பெருமை இந்நூலகத்திற்கு உரியாதாகின்றது எனலாம்.

ஒரே சுவடிக்கட்டில் பல இலக்கண நூல்களையும் தொகுத்து எழுதிவைக்கும் மரபும் இருந்தமையை இங்குள்ள ஏடுகளால் அறிய முடிகின்றது. காரிகை மூலம், அகப்பொருள் மூலம், சிதம்பரப் பாட்டியல், அபிதானப்பொருத்தப்பாட்டியல், சம்பந்த பொருத்த இரத்தினச்சுருக்கம், பன்னிருப்பாட்டியல் ஆகியவற்றை ஒரு தொகுப்புள் அடக்கியுள்ளனர். நன்னூல் விருத்தியுரை கொல்லம் 857 ஆம் ஆண்டில் அதாவது கி. பி. 1682–இல் எழுதப்பெற்ற காலப் பழமையுடைய ஏடு ஒன்றும் இங்குள்ளது.

உவமையலங்காரம் என்னும் 34 பாடல்கள் அடங்கிய ஒரு சிறு நூலும் உள்ளது. அச்சானதாகத் தெரியவில்லை. 'சிவகுரு நாதன் சேவடி வணங்கி உவமையின் இயல்பு உரைக்குவன் யானே' எனத் தொடங்குகிறது. இதனையும் ஆராய்ந்து பதிப்பிக்கலாம்.

இலக்கிய நூல்கள் :

சங்கநூல்களில் அகநானூறு பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து ஏடுகள் உள்ளன. சங்க இலக்கியச் சுவடிகளின் எண்ணிக்கை ஏனையவற்றோடு ஒப்பிடும்போது மிகக் குறைவாகவே உள்ளது திருக்குறள் மூல எடும், பரிமேலழகர் உரை ஏடுகளும் உள்ளன. பரிமேலழகரின் உரைக்கு உரையாய் அமைந்த காரிரத்தின கவிராயரின் பரிமேலழகர் நுண்பொருள் மாலை ஏடும் இங்கு உள்ளமை குறிப்பிடத் தருந்தது. திருக்குறளுக்கு எளிய முறையில் அமைந்த பொழிப்புரை ஏடுகளும் உள்ளன.

அரிய குறள் ஏடுகள் :

> 'அகரமுதலவெழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாகவுடையன வதுபோலுலகங் கடவுளை முதலாக வுடையது'

என்பது போன்ற ஒரு வரி விளக்கம் அமைந்த திருக்குறள் ஏடும் (121) உள்ளது. திருக்குறள் விளக்கமாய் அமைந்த திருவேங்கட வெண்பா (123) திருக்குறள் திருவிருத்தம (124) ஆகிய நூல்கள் இன்னும் அச்சேறினதாகத் தெரியவில்லை,

திருவேங்கட வெண்பா 19 ஏடுகளைக் கொண்டு நல்ல நிலையில் உள்ளது. ஒவ்வோர் அதிகாரத்தையும் ஒவ்வொரு குறளைக் கொண்டு வெண்பாவாகப் பாடியுள்ளார். பொருட்பால் 108 ஆவது அதிகாரம் வரை உள்ளது. 1013 வருடம் மாசி மீ 16 ஆதிவாரத்தன்று எழுதி முடிந்தது' என்னும் குறிப்புள்ளது.

திருக்குறள் திருவிருத்தம் 84 ஏடுகளைக் கொண்டுள்ளது. தலையேட்டில் "செல்ல பஞ்சுரில் இருக்கும் நம்பி சூரிச்சி தாமோதரப் பெருமாள் முதலியார் புத்திரன் பரமசிவன் முதலியார் வரகவியாகச் சொல்லியது என்று குறிக்கப்பட்டுள்ளது. 78–ஆவது அதிகாரம் வரை அமைந்துள்ளது.

குறள் பாட பேத ஆராய்ச்சி ஏடு

'திருவள்ளுவர் குறள், திருவள்ளுவமாலை, நாலடியார்' என்னும் (128) பெயரில் அமைந்து விளங்கும் ஏடு ஓர் அரிய பாட பேத ஆராய்ச்சி ஏடாக விளக்குவது குறிப்பிடத்தக்கது. இக் குறிப்பினை விரிவாக ஆராய்ந்தால் 'மூலபாட ஆய்வியல்' (Textual criticism) குறித்து முன்னையோர் கொண்டிருந்த எண்ணம் நன்கு புலனாகும். இவ்வோலைச் சுவடியால் பதிப்புநெறியின் பண்பும் புலனாவதைக் காணலாம்.

திருக்குறள் முதல் பதிப்பு

திருக்குறளின் மூலப்பதிப்புகளுள் தமிழில் மிகத் தொன்மையான பதிப்பாக இன்று நமக்குக் கிடைப்பது கி. பி. 1812 இல் வெளியான 'திருக்குறள் மூலபாடம்' என்னும் தலைப்பில் அமைந்த நூலாகும். 'இலக்கண இலக்கிய வாராய்ச்சியுடையவர்களாலிகிதப் பிழையறவாராய்ந்து சுத்த பாடமாக்கப்பட்டது' என்னும் குறிப்புடனும் தொண்டை மண்டலம் சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகரம்— மலையப்ப பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் அச்சிற் பதிக்கப்பட்டது. மாசத் தினசரிதை அச்சுக்கூடம் இ. ஆண்டு (1812 எனத் தமிழ் எண்ணில் தரப் பட்டுள்ளது) என்னும் குறிப்புடனும் தலைப்புப் பக்கம் திகழ்கின்றது. இந்நூலுடன் நாலடியார் மூலபாடமும், திருவள்ளுவமாலை மூல பாடமும் சேர்ந்து வெளியிடப்பட்டுள்ளன.

மரவெழுத்தால் அச்சடிக்கப்பட்டுள்ள இப்பதிப்பே திருக்குறள் பதிப்பு வரலாற்றில் முதல் நூலாகத் திகழ்கின்றது. தமிழகத்தில் முதன்முதலாக கி பி. 1712-இல் தரங்கம்பாடியில் முதல் அச்சுக் கூடம் ஏற்பட்டது. எனவே சரியாக ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் இப்பதிப்பு நமக்குக் கிடைத்துள்ளது. நூற்று எழுபது ஆண்டு

களுக்கு முன்னர்த் தோன்றிய இப்பதிப்பில் காணப்படும் சில அரிய குறிப்புகள் மூலபாட ஆய்வியல் (Textual Criticism) பற்றிய சிறந்த கருத்துக்கள் எனலாம்.

மூலபாட ஆய்வியல்

நெடிய கால இடைவெளிக்குப் பின்னர் ஒரு நூலினைப் பதிப்பிக்கும் போது ஆசிரியரின் உண்மைப் பாடத்தைத் தெளிந்து பதிப்பிப்பது என்பது சிக்கலான செயலாகும். கிடைக்கின்ற பல்வேறு சுவடிகளையும் திரட்டி, நுணுகி ஆராய்ந்து மூல பாடத்தைத் துணிதல் வேண்டும். நூலுக்குள்ளேயே கிடைக்கின்ற ஆதாரங்கள் (Internal evidences) நூலின் நடை, நூலில் கையாளப்படும் சொற்களின் தன்மை வரலாற்றுக் குறிப்புகள் முதலாயின கொண்டு மூலபாடத்தைத் துணியலாம் என்பர். இரண்டாவதாக நூலுக்கு வெளியில் கிடைக்கின்ற ஆதாரங்கள் (External evidences) நூலாசிரியருடைய பிற படைப்புகள், அவர் காலத்திய பிறபடைப்புகளில் காணப்படும் அந்நூலைப் பற்றிய குறிப்புகள், மேற்கோள்கள் முதலாயினவும் மூலத்தைத் துணிதற்குப் பயன்படும்.[3]

அச்சுப் பெறவேண்டிய இன்றியமையாமை

1812-இல் தோன்றிய 'திருக்குறள் மூலபாடம்' என்னும் இம் முதல் பதிப்பின் பதிப்புரையில் மேற்கண்ட மூலபாட ஆய்வியல் இலக்கணக் கூறுகளுள் சில விதந்து கூறப்படுவது பெரிதும் எண்ணத்தக்கதாகும் 'வரலாறு' என்னும் தலைப்பில் அந்நூல் தரும் செய்தி வருமாறு

> "கற்றுணர்ந்த தமிழாசிரியர்களருமையினியற்றிய இலக்கண விலக்கியங்களாகிய அரிய நூல்களெல்லாம் இந்நாட்டில் அச்சிற் பதிக்கும் பயிற்சியின்றிக் கையினாலெ யெழுதிக்கொண்டு வருவதில் – எழுத்துக்கள் குறைந்தும் – மிகுந்தும் - மாறியும் சொற்கடிரிந்தும் - பொருள் வேறுபட்டும் பாடத்துக்குப் பாடம் ஒவ்வாது பிழைகள் மிகுதியுமுண்டாகின்றவால் - அவ்வாறு பிழைகளின்றிச் சுத்த பாடமாக நிலக்குப்படி - அச்சிற் பதித்தலை வழங்குவிட்பதற்குத் தேசித்து - நூலாசிரியர்களுள் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரருளிச் செய்த - அறம் பொருளின்பமென்னும் முப்பாலையும் நுட்பமாக விளங்க வுணர்த்துந் திருக்குறள் மூலபாடமும் - முனிவர்களருளிச் செய்த நீதி நூலாகிய நாலடி மூலபாடமும் இப்போதச்சிற் பதிக்கப் பட்டன"[4]

இக்குறிப்பினால் ஏறத்தாழ 170 ஆண்டுகட்கு முன் தமிழிலக்கியங்கள் அச்சுப் பெறாதிருந்த நிலையினால் ஏற்படும் குறைகளையும் மூலபாடங்கள் வேறுபடுவதற்கான காரணங்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

பதிப்புநெறிகள்

இந்நூலினை அச்சிற் பதிப்பதற்கு முன் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை, அடுத்து பகுதி எடுத்துரைக்கும் 'இவை அச்சிற் பதிக்குமுன் தென்னாட்டில் பரம்பரை ஆதீனங்களிலும் வித்துவ சனங்களிடத்திலுமுள்ள சுத்த பாடங்கள் பலவற்றிற்கு மிணங்கப் பிழையற இலக்கண விலக்கிய வாராய்ச்சியுடையவர் களாலாராய்ந்து சுத்த பாடமாக்கப்பட்டன'' என்னும் குறிப்பு திருக்குறளின் அனைத்துச் சுவடிகளையும் தொகுத்துப் பார்த்த செய்தியை அறிவிக்கும். சுத்த பாடங்களைத் தீர்மானிப்பதற்கு தனி ஒருவரின் முயற்சி பெரிதும் பயன் தராது. எனவே அறிஞர் குழு கூடி முடிவெடுத்தமையும், அவ்வாறு எடுத்த முடிவையும் பல்வேறு அறிஞர்களுக்கு அனுப்பி, கருத்துரை பெற்றதையும் முதல் பதிப்பின் வரலாறு நமக்குக் காட்டுகின்றது.

> ''இஃதுண்மை பெற-திருப்பாசூர் முத்துசாமி பிள்ளை திருநெல்வேலிச்சீமை-அதிகாரி-ம-ராமசாமி நாயக்கர் முன்னிலையி லன்னாட்டிலிருந் தழைப்பித்த சுத்த பாடங் களுட னெழுதி வந்த வரலாறு.
>
> இந்தப் பொத்தகத்திலெழுதிய தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனா ரருளிச் செய்த திருக்குறள் மூலபாடமும் நாலடியார் மூலபாடமும் திருவள்ளுவ மாலையும்-ஆக மூன்று சுவடியும் வெகு மூல பாடங்கள்-உரை பாடங்களதற்குக் கருவியாக வேண்டும்-இலக்கண விலக்கியங்களெல்லாம் வைத்துப் பரிசோதித்துப் பாடந் தீர்மானஞ் செய்து-ஓரெழுத்து-ஓர் சொல்-நூதனமாகக் கூட்டாமற் குறையாம லனேக மூல பாடங்களுரை பாடங்களுக்கிணங்கினதாகத் தீர்மானம் பண்ணிய சுத்த பாடம் பார்த்தெழுதிச் சரவை பார்த்த பாட மாகையாலும்-அந்தப்படி தீர்மானம் பண்ணியெழுதின பாடமென்பதும்-இவடங்களிலிருக்குந் தமிழாராய்ச்சியுடைய மகாவித்துவ செனங்களாற் பார்க்கும்போது மவர்கள் கருத்திற் தோன்றப்படும்-ஆகையாலும் பாடங்களி லெவ்வள வேனுஞ் சந்தேகப்பட வேண்டுவதின்று-இப்படிக்கு திருநெல்வேலி அம்பலவாண கவிராயர்.''

இவ்வரிய பதிப்புரையில் மூலபாடத்தை நிர்ணயிப்பதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் நெறிமுறைகளும் புலனாகின்றன. மூலபாடத்தை அறிதற்கு இலக்கியங்களையும் பிற இலக்கணங்களையும் ஆராய்ந்து முடிவெடுத்தனர் ; எழுத்தோ சொல்லோ கூட்டாமலும் குறையாமலும் சுத்த பாடத்தைக் கணித்தனர் ; 'சரவை பார்க்க பாடம்' என்றும்,[5] மகா வித்துவான்கள் எந்த அளவிலும் சந்தேகப்பட வேண்டுவ தின்று என்று உறுதி மொழியும் தந்தனர். இதற்குப் பின்னரும் பதிப்புரையில் பின்வரும் குறிப்புக் காணப்படுகின்றது. இந்தப் பாடங்களை இவடம் வந்திருந்த திருவாவடுதுறை ஆதீன வித்துவான் அம்பலவாணத் தம்பிரான் சீர்காழி வடுகநாத பண்டாரம் இவர்களாலு மறுபடி கண்ணோட்டத்துட னாராயப்பட்டன'' எனவே பல்வேறு அறிஞர் குழாம் கூடி மூலபாடம் தெளிந்த முயற்சி இவற்றால் புலனாகும்.

இங்ஙனம் பல்வேறு அறிஞர்களிடம் அனுப்பியும், ஆய்ந்தும் முடிவுகண்ட இப்பதிப்பின் மூலபாடங்களிலும் பிழை திருத்தம் கண்ட வரலாறு பெரிதும் குறிப்பிடத்தகுந்ததாகும். இந்நூல் அச்சானதற்குப் பின்னரும் இந்நூலினைப் பார்த்து ஓலையில் படியெடுத்து எழுதி வைத்துள்ளனர். அங்ஙனம் படியெடுத்தவர்கள் பாட பேதங்களைக் கூர்ந்தாராய்ந்து பிழை திருந்தியுள்ளனர்.

கல்கத்தாத் தேசிய நூலகத்தில் கிடைக்கும் திருக்குறள் ஓலைச் சுவடி மூலம் இவ்வரலாறு தெரியவருகிறது அந்த ஓலைச்சுவடியில் தரும் குறிப்பு வருமாறு :

> "இது பொத்தகம் கலியுகாப்தம் 4900-க்கு ஆங்கிரச தொண்டை மண்டலம் சென்னைப்பட்டணத்தில் தஞ்சைநகரம் மலையப்பிள்ளை குமாரன் ஞானப்பிறகாசனால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது மாசமதினச் சரிதையின் அச்சுக் கூடம்—ஆண்டு 1812
>
> திருநெல்வேலி அம்பலவாண கவிராயர் பிழை தீர்த்துச் சென்னைப் பட்டனத்துக்கு அனுப்பிவிச்சு அவ்விடத்திலிருந்து திருவாடுதுறை ஆதீன வித்துவான் அம்பலவாணத் தம்பிரான், சீர்காழி வடுகநாத பண்டாரம் அவர்கள் மறுபடிக் கண்ணோட்டத்துடன் ஆராயப்பட்டு அச்சிற் பதித்த காயிதப் புத்தகத்தை ஆழ்வார் திருநகரியில், தேவர் பிரான் கவிராயர், ஆதிநாத பிள்ளை தவத்தேடுகள் வைத்துச் சோதித்து வேறேடு எழுதியிருப்பது. மறுபடி திருநெல்வேலியில் அம்பலவாண கவிராயரிடத்தில் தீர்மானமானது. ஆழ்வார் திருநகரியில் சோதித்தது. 9.99 ஹ தை மீ ... நம்முடைய ஏடு சுத்தமாய் திருத்தியிருக்கிறது."

என்னும் குறிப்பினால் அச்சேரிய திருக்குறளின் முதல் பதிப்பிலும் மூலபாடங்களைத் திருத்தி மீண்டும் பதிப்பாசிரியருக்கே அனுப்பித் தீர்மானம் செய்த பதிப்பு வரலாறு தெரியவருகின்றது. பிழையான பாடங்கள் நூலில் புகுந்துவிடக் கூடாது என்னும் உயரிய நோக்கம் இதனால் தெளிவாகும். இவ் வோலைச் சுவடியில் பிழைதிருத்தங் கள் பற்றி விரிவான குறிப்புகள் இருப்பது மல்லாமல் அட்டவணைப் படுத்தியும் எழுதியுள்ளனர். இந்த அட்டவனை,

அதிகாரம்	குறள்	ஆழ்வார்திருநகரிஏடு	அச்சடிபிழை

எனும் நான்கு தலைப்புக்களின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. எனவே இச்சுவடி 'திருக்குறள் பாடபேத ஆராய்ச்சி ஏடு'' எனலாம்.

திருகுறளுக்குக் கிடைத்த முதல் அச்சுப் பதிப்பு நூலிலேயே பதிப்பு நெறிகள் குறித்த பல அரிய விவரங்கள் நமக்குக் கிடைக் கின்றன. முன்னையோர் ஒரு நூலினைப் பதிப்பிக்குமுன் மேற் கொண்ட குழு முயற்சிகள் புலனாகின்றன. அச்சு நூலில் ஏற்படு கின்ற பிழைகளைச் சுட்டிக்காட்டி ஆராயும் அரிய ஏடாக இத் திருக்குறள் சுவடி அமைந்திருப்பதும் இவ்வரலாற்றுக் குறிப்பினால் தெளிவாகும்.

பழமையான ஏடுகள்

சிலப்பதிகாரம், சிந்தாமணி, சூளாமணி முதலாயவற்றின் ஏடு களுள் சிந்தாமணி ஏடு மிகவும் காலப்பழமை வாய்ந்ததாயிருக்கக் கூடும். நச்சினார்க்கினியர் உரையுடன் அமைந்த ஏடு கி.பி, 1611-இல் எழுதியதாகும். இது ஏறத்தாழ 400 ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்டுள்ளதாகும். 1682-இல் எழுத்தப்பட்ட நன்னூல் விருத்தியுரை ஏடும், 1702-இல் எழுதப்பட்ட திவாகரம் ஏடுகளும் பழமையான ஏடுகளுள் குறிப்பிடத்தக்கன. சிலப்பதிகாரத்தைத் தழுவி எழுதிய கோவலன் கதை என்னும் அம்மானை ஏடு அச்சில் வந்ததாகத் தெரியவில்லை.

பிற நூல்கள் :

தேவாரம், திவ்வியப்பிரபந்தம், திருவாசகம், திருவிசைப்பா என்னும் பக்திப்பனுவல் ஏடுகளும் பல உள்ளன. அருணகிரிநாதரின் திருவகுப்பு, அருணாசலக் கவிராயர் இராமநாடகம், முத்துத் தாண்டவர் கீர்த்தனை, வைகுண்ட அம்மானை, முதலிய பல ஏடுகளும் இத்தொகுப்பில் உள்ளன.

பிள்ளைப் பெருமாளையங்கார் நூல்கள், தஞ்சை வாணன் கோவை, கலிங்கத்துப்பரணி முதலியன இங்குள்ள பிரபந்தங்களுள் குறிப்பிடத்தக்கன. மற்றும் அந்தாதி, பிள்ளைத்தமிழ், விசித்திர மடல், வண்ணம், விருத்தம், ஊசல், அம்மானை, ஊலா, விலாசம், மாலை, வருக்கக்கோவை, சதகம், கலம்பகம், தூது, பள்ளு, வெண்பா, கலித்துறை, குறவஞ்சி முதலியவை பற்றிப் பல ஏடுகள் உள்ளன. இவற்றுள் சில அச்சிடப்பெறாதன. இவற்றை யெல்லாம் கண்டு ஆராய்ந்து பதிப்பித்தல் அறிஞர் கடனாகும்.

முத்துசாமி மகிபர் பிள்ளைத்தமிழ், மீனாட்சிநாத பிள்ளை விசித்திரமடல், பலர்மீது பாடிய வண்ணங்கள், சிற்றின்பப்பதங்கள் முதலியன வெளிவராத நூல்களாக இருக்கக்கூடும். 'பகவற்கீதை வசனம்' என முழுவதும உரைநடையாய் அமைந்த நூலும் இங்குள்ளது.

கம்பராமாயணச் சுவடிகள் !

இங்குள்ள சுவடிகளுள் கம்பராமாயணச் சுவடிகள் மட்டும் 77 எண்ணிக்கை கொண்டனவாக உள்ளன. எல்லாக் காண்டங் களும் அமைந்த ஏடுகள் சிலவே உள்ளன. தனித்தனிக் காண்டம் அமைந்த ஏடுகள் சிலவும், இரண்டு மூன்று காண்டங்கள் அமைந்த ஏடுகள் பலவும் உள. விவரம் வருமாறு :

அயோத்தியா காண்டம்	12
அயோத்தியா — உத்தர	1
அயோத்தியா — சுந்தர	2
ஆரணிய	7
ஆரணிய — கிட்கிந்தா	1
உத்தர	3
உயுத்த	15
கிட்கிந்தா — சுந்தர	4
பாலகாண்டம்	27
பால — ஆரணிய	1
பால — சுந்தர	4

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பல்வேறு ஏடுகளை ஒப்புக் நோக்கிக் கம்பராமயணத்தைப் பதிப்பித்து வெளியிட்டது. ஆனால் இங்குள்ள ஏடுகள் அவர்களுடைய பதிப்பிற்கும் பயன்படுத்தப்பெற வில்லை எனத் தெரிகின்றது. இவற்றுள் பெரும்பாலனவும் திருநெல்வேலி, நாஞ்சில் நாட்டுப் பகுதிகளிலிருந்து திரட்டப் பெற்றனவாகும். ஆழ்வார் திருநகரியின் பகுதிகளில் வாழ்ந்த

கம்பராமாயண வல்லுநர்களால் எழுதப்பெற்ற இவ்வேடுகளும் முறையாகப் பயன்படுமானால் கம்பராமாயணத்திற்குச் செம்மையான நல்ல பாடங்கள் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

ஏடுகளில் காணலாகும் அரிய குறிப்புகள்

ஏடுகள் இலக்கியங்களைப் பாதுகாத்து நமக்களிப்பது போலவே ஏடுகளில் காணப்பெறும் சில அரிய குறிப்புகளும் அவர்தம் பண்புகளைப் புலப்படுத்துவனாய் அமைந்துள்ளன. ஏட்டின் இறுதியில் சுவடி எழுதுவோர் குறிப்பிட்டுச் சொல்லும் சில செய்திகளால் கால வரலாறும், குடும்ப வரலாறு தெரிய வருகின்றது.

நேமிநாதம் ஏட்டில் இறுதியில் உள்ள குறிப்பு வருமாறு :
'உரையுடன் கூடியது. 903 ௵ புரட்டாசி ௴ 42 செவ்வாய்க் கிழமையும் பிரதமையும் அத்த நட்சத்திரமும் கூடிய நாளில் நேமிநாதம் எழுதி முகிந்தேன். *சங்கத்தமிழை அனுசரிக்கும் மகா வித்வசனங்களுக்குத் தொண்டு செய்யும் நெல்லை நாயகம்.* என்றும், சூடாமணி நிகண்டு ஏட்டில்,
சிவனடியார்க்குத் தொண்டு செய்யும் நெல்லை நாயகம் எழுத்து'

என்றும் காணப் பெறுகின்றன, இவை எழுதியவரின் உள்ளப் பாங்கை நன்கு காட்டுவனவாய் அமைந்துள்ளன.

சமய உணர்வைக் காட்டும் குறிப்புகள் சில ஏடுகளில் அமைந்துள்ளன.

''தில்லையாளியில் வாழ்கின்ற அருணாசலம் பிள்ளை சுதனும் நடராஜ பிள்ளைக்கு இளையவனான சரவணைக் கிளையவனான விருத்தாசலம தன்கனிட்டனாகிய விருத்தாசலத்துக்கு மண்டலவன் நிகண்டு எழுதி நிறைவேறியது.
சர்வதாரி ௵ ஆனி ௴ 4 தேதி ஆதி வாரமும் பஞ்சமி திதியும் கூடின சுபதினத்தில் ஆதியமந்தமுமில்லாத கர்த்தனுமாய சகல சீவ சந்துக்களுக்குத் தாயமாய் கடல் சூழ்ந்த பூலோகத்துக்கு நாயனாகிய பிரம்மாவினுடைய வேதத்துக்கு முதற்கொழுந்தாய் அன்புள்ள பக்தாளுடைய இருதயத்தில கிருபைக்கடியாய் நிறைந்திருக்கும் சிவசமயம்.

என்று தம் சமய உணர்வினை வெளிப்படுத்துகின்றார்.

இவ்வபறே இன்னொருவர் தம்மை, 'செக்காலை குடியிலிருக்கும் அடுத்தாரை ரட்சிக்கும் பெருமாள் பிள்ளை' எனக் குறிப்பார். பிழை பொறுக்கும் பெருமாள் எழுதியது' என மற்றொருவர் தம்மைச் சுட்டுவார்.

ஆசிரியர்களிடம் அளவற்ற பக்தி கொண்டவர்கள் என்பதை "திருமேனி கவிராயரவர் பிரசாத குமாரர் ரத்தின கவிராயர் பாத தாமரையே தஞ்சம்' என்றும், ''பெரிய திருவடி திருமேனி கவிராய குரு புத்திரரான ரத்தின கவிராய குரு சீபாத தாமரைகளே சரணம்" என்றும் குறிப்பதால் அறியலாம்.

''பிழைபார்த்து மைக்காப்பு சாத்தவும்'' ''பொத்தகம் பிழையா யிருப்பது பார்த்துத் திருத்த வேண்டியது'' என்னும் தொடர்கள் நூல் பிழையற வருதல் வேண்டும் என்னும் அவர்தம் வேட்கை யினைக் காட்டும். 'நன்னூல் பொஸ்தகம் நீடுழிகாலம் வாழ்ந்திருக்க என நூலை வாழ்த்தும் மரபையும் இச்சுவடிக் குறிப்புகளால் உணர முடிகின்றது.

'திருவழுதி வளநாட்டுத் திருநகரி அழகிய நம்பியாபிள்ளை திருவேங்கடமுடையான்' என்றும், ''திருநெல்வேலி தேரோடும் வடக்குத் தெருவாகிய கற்பக விநாயகன் பெருந்தெரு வடசிறகு வடக்கானம் சேதுராய கோத்திரம் நமசிவாயம் பிள்ளை பௌத்திரனும் சங்கரமூர்த்தியா பிள்ளையவர்கள் குமாரனுமாகிய சாந்திமதிநாதன் கையெழுத்து' என்றும் குறிப்பதால் எழுது வோரின் வரலாற்றுணர்வும் புலனாகும்.

இங்ஙனம் சுவடிகளின் இறுதியில் காணப்பெறும் அரிய தொடர் களும், சொல்லாட்சிகளும் படிக்கப்படிக்கத் தெவிட்டாத பேரின்பப் தருவனவாய் அமைந்துள்ளன.

முடிவுரை :

அரிய ஏடுகளைத் தன்னகத்தே பெற்று விளங்கும் இந்நூலகச் சுவடிகள் தமிழாய்வர்களுக்கு அரும்பெரும் கருவூலங்களாகத் திகழ்கின்றன. காலப்பழமையால் நலியும் இச்சுவடிகளை மீட்டுரு வாக்கும் பணியை விரைவில் செய்தல் நலம் பயக்கும். "திருக்குறள் தெளிவுரை போன்று சுவடி வடிவிலேயே அக்காலத்தில் எழுதப் பெற்ற புதுமையும் இந்நூலகத்தில் உண்டு. அச்சில் வாராத அருந்தமிழ் நூல்களை வெளிக்கொணரும் பணியில் விரைவாக நாட்டஞ் செலுத்துவது தமிழுக்கும் தமிழருக்கும் செய்யும் அரும்பணி யாகும். 'மறைந்து போன தமிழ் நூல்கள் என்று அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி எழுதித் தொகுத்த நூலைப் பார்த்த பின்னரும் அப்பட்டியலில் மீண்டும் பல நூல்களைச் சேர்த்திட வாய்ப்புத் தருவதும், வாளா விருப்பதும் சரியாமோ ?

'ஏடான பைந்தமிழின் ஏத்தரிய நூலெல்லாம்
தேடாமல் கையற்றுத் தேய்தல்' நன்றோ ?

பின்னிணைப்பு

கல்கத்தா நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகளின் பட்டியல் அகர வரிசை

அகநானூறு — களிற்றியானை நிரை	கூனப்பன் விறலி விடுதூது
அகப்பொருள்	கைலாச நிகண்டு
அகராதி	கொச்சகம்
அகராதி நிகண்டு	கொடிப்பாடல்
அகராதி முதல் தொகுதி	கொண்டல் விடு தூது
அகராதி மோனைக்ககராதி யெதுகை	கொலை மறுத்தல்
அட்டநாக விதி	கோவலன் கதை அம்மானை
அண்டகோளவிலாசம்	சகுன நூல்
அணியிலக்கண வினாவிடை	சங்கற்ப நிராகரணம்
அபிதானப் பொருத்தப்பாட்டியல்	சதுரகராதி
அபிராமியந்தாதி	சந்தவிருத்தம்
அரங்கரந்தாதி	சம்பந்தப் பொருத்தப்பாட்டியல்
அரிச்சந்திரன் கதை	சம்பந்தர் பிள்ளைத்தமிழ்
அருணகிரியந்தாதி	சாதக சந்திரிகை
அருணாசலக் கவிராயர் இராம நாடகம் அயோத்திய காண்டம் வரை	சிதம்பரப் பாட்டியல்
அழகர் அந்தாதி	சிந்தாமணித் திரட்டு
அனவரததானர் பேரில் வெண்பா	சிலப்பதிகாரம்
அஷ்டபதாட்சரசாரம்	சிவகவசம்
ஆசாரக்கோவை	சிவசிவ வெண்பா
ஆசிரிய நிகண்டு	சிவஞானசித்தியார்
ஆதிபுரி பொன்னியம்மை வருக்கப் பதிகம்	சிவஞான போதம்
இரணியவதைப்பரணி	சிவதருமோத்திரம்
இரத்தினச் சுருக்கம்	சிவப்பிரகாசக் கட்டளை
இராசகோபால மாலை	சிவப்பிரகாசம்
இராமசெயத் திருப்புகழ்	சிற்றம்பலக்கோவை
இராமாயணச் சுருக்கம்	சிற்றம்பல நாடிகள் கலித்துறை
இராமாயணப் பதம்	சிற்றின்பப் பதங்கள்
இராமாயண வசனம்	சிறுபஞ்சமூலம்
இருசமய விளக்கம்	சிறுபாணாற்றுப்படை
இருசொல்லலங்காரம்	சினேந்திரமாலை

இருபா இருபஃது
இலக்கண விளக்கம்
இன்னா நாற்பது
இனியது நாற்பது
உண்மை நெறி விளக்கம்
உத்தரகோசமங்கைப் புராணம்
உரிச்சொல் நிகண்டு
உலக நீதி
உவமான சங்கிரகம்
உவமையலங்காரம்
உள்ளமுடையான்
எவ்வூளூர்வீரராகவர் கொச்சகம்
ஏலாதி
கச்சிவரதர் மாலை
கணக்கதிகாரம்
கபாலீசுவரர் பஞ்சரத்தினம்
கம்பராமாயணம்
கலிங்கத்துப்பரணி
கலிந்துறை. பதம் முதலியன
களவழி நாற்பது
காரிகை மூலம்
கிரந்த நூல்
குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு
குமரேச சதகம்
குமாரசுவாமியம்
குற்றாலக் கலித்துறை
குற்றாலக்குறவஞ்சி
கூர்ம புராணம்
திருக்குறள் பரிமேலழகர் உரையை ஒட்டிச் செல்லும் எளிய உரை
திருச்செந்தூர் உலா
திருச்செந்தூர்ப்பிள்ளைத் தமிழ்
திருத்தொண்டத்தொகை
திருநெல்வேலி வண்ணம்
திருப்பள்ளியெழுச்சி
சீவக சிந்தாமணி
சுந்தரர் வேடுபறி
சுப்பிரமணிய ரகவல்
சுவாமி அனவரதானநாதர் பேரில் விருத்தம்
சூடாமணி நிகண்டு
சூளாமணி
சேத்திரக்கோவை
சைவ சமய நெறி
சௌந்திரி அந்தாதி
ஞானவாசிட்டம்
டிஸ்கவுண்டு மாலை
தக்கயாகப் பரணி
தஞ்சைவாணன் கோவை
தண்டியலங்காரம்
தலைவிரிப்பு விவரம்
தியாகேசர் பஞ்சரத்தினம்
திருகச்சிமாலை
திருக்கனாரரைச்சிலேடை வெண்பா
திருக்களிற்றுப் படியார்
திருக்குடந்தை அந்தாதி
திருக்குறள்
திருக்குறள்
திருக்குறள் திருவிருத்தம்
திருக்குறள் நுண்பொருள் மாலையுரை
திருக்குறள் பரிமேலழகர் உரை
திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு விளக்க உரை
பாகவதம்
பார்த்தசாரதி விருத்தம்
பார்த்தசாரதி வெண்பா அந்தாதி
பிங்கலம்
பிரமோத்திர காண்டம்
பிரயோக விவேகம்
புறத்திரட்டு

திருப்புகழ்
திருமலைநாதர் சரப்புராணம்
திருமுருகாற்றுப்படை
திருவகுப்பு
திருவந்தாதி
திருவருட்பயன்
திருவல்லிக்கேணி பார்த்தசாரதி அந்தாதி
திருவள்ளுவ மாலை
திருவள்ளுவமாலையுரை
திருவாசகக் கட்டளை
திருவாசகப் பொழிப்பு
திருவாசகம்
திருவாதவூரார் புராணம்
திருவாய்மொழி
திருவிசைப்பா
திருவிளையாடல் புராணம்
திருவுந்தியார்
திருவெம்பாவை
திருவேங்கடத்தந்தாதி
திருவேங்கடமாலை
திருவேங்கட வெண்பா
திருவைகுந்தைகள் வரந்தாதி
திவாகரம்
துகில்விடு தூது
தேவாரத்தெரிவு
தேவாரம்
தொகை அகராதி
தொல்காப்பியம்
நந்திக்கலம்பகம்
நந்தீசுவரர் வர்க்கு
நம்பியப்பொருள் விளக்கம்
நம்பியாண்டார் நம்பிதிருவந்தாதி
நவநீதப்பாட்டியல்
புறத்திரட்டுச் சுருக்கம்
பூதரவிலாசம்
பூவைக் கோவை
பூவைத்தல புராணம்
பூஜா விதிமுறை
பெயரகராதி
பெரியபுராணம்
பெரும்பாணாற்றுப்படை
பொதிகை நிகண்டு
பொருநராற்றுப்படை
பொன்னூசல்
போற்றிக்கலி வெண்பா
போற்றிப்பஃறொடை
மகாபாரதம் வில்லிபுத்தூரார்
மணவாள நாராயண சதகம்
மதுரைக் கலிவெண்பா
மயிலைப்புராணம்
மாதர் நீதி
மீனாட்சிநாத பிள்ளை விசித்திர மடல்
முக்கூடற் பள்ளு
முச்சொல்லலங்காரம்
முத்துசாமி மகிபர் பிள்ளைத்தமிழ்
முத்துத்தாண்டவர் கீர்த்தனை
முதுமொழிக் காஞ்சி
முல்லைப்பாட்டு
முதுரை
யாப்பருங்கலக் காரிகை
யாப்பருங்கலம்
வண்ணப்பாடல்கள்
வண்ணம்
வரு/ப் பிறப்பு/ஷ
விக்கினேசுவரர் அகவல்
விகடப்பிரசங்க பழமொழி அகராதி

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

இதழ் வெளியீடுகள்

செய்தி மலர் –திங்களிதழ் தமிழ்க்கலை -முத்திங்களிதழ்
News Bulle tin –திங்களிதழ் Tamil Civilization -முத்திங்களிதழ்

கட்டண விவரம்

திங்கள் இதழ்

ஓராண்டு	உ ரு. 5	4 தாலர்
மூன்றாண்டு	உ ரு. 12	10 தாலர்

முத்திங்கள் இதழ்

ஓராண்டு	உ ரு 50	10 தாலர்
ஐந்தாண்டு	உ ரு 200	40 தாலர்

	நூல்கள்	பக்கம்	உரு
1.	தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50 புலவர் செ. இராசு	356	150
2.	கலித்தொகை (நச்சினார்க்கினியர் உரை), இ. வை. அனந்தராமையர் அடிக்குறிப்புடன்	1228	150
3.	சங்க இலக்கியக் கட்டுரைகள்-கருத்தரங்கம்	234	30
4	ஆராய்ச்சித் தொகுதி மு. இராகவையங்கார்	551	100
5.	தொல்காப்பியம்-சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை	324	60
6.	தொல்காப்பியம்-நன்னூல்-சொல்லதிகாரம் பேரா. க. வெள்ளைவாரணனார்	474	75
7.	நன்னூற் காண்டிகையுரை ஆறுமுக நாவலர் பதிப்பு	398	65
8.	பெரிய திருமொழி உரையும் தமிழாக்கமும் டாக்டர் தெ. ஞானசுந்தரம்	688	
	நூலகப்பதிப்பு		180
	பொதுப்பதிப்பு		130
10	நீலகேசி (உரையுடன்) பேரா. சக்கரவர்த்தி நயினார் பதிப்பு	848	140
11	சட்டவியல் பேரா. மா. சண்முகசுப்பிரமணியம்	416	
	நூலகப்பதிப்பு		92
	மாணவர் பதிப்பு		36
	தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் பேரா. கே. எம். வேங்கடராமையா	564	155

விற்பனைக் கழிவு :- அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெறும்படி. களுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

கரந்தைத் தமிழ்ச் சங்கவெளியீடுகள்

யாழ் நூல் — விபுலானந்த அடிகள்	ரூ.	50 00
கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்)	ரூ.	30 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60 00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ்	ரூ.	6 00
கபிலர் – நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ	4 00
நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3 00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு – பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2 00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1 00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0 62
சிவமும் செந்தமிழும்–பாவலர் ச. பாலசுந்தரம்	ரூ.	0 25

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்) பேராசிரியர் ச. பாலசுந்தரம்		7 50
கலைக்கூத்தன் கவிதைகள்	ரூ.	6 00

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி. நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்–613 002.

அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி, ஜெமினி அச்சகம், 1837/1, மேலராஜவீதி, தஞ்சாவூர் - 613 009.

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். **க. வெள்ளைவாரணன்,**
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி **சு. செல்லப்பன்,** எம். ஏ., பி டி., பி எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் **தமிழண்ணல்,** எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். **சி. பாலசுப்பிரமணியன்,**
எம். ஏ., எம்.லிட், பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். **பி. விருத்தாசலம்,** எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் **சி. கோவிந்தராசன்,**
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் **ஆ. பாலன்,** எம். ஏ.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். **மீனா. இராமதாசு,** எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமா மகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு. **பா. மதிவாணன்,** எம். ஏ., எம் பில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர் :
பேராசிரியர் ச பாலசுந்தரம்

Regd. No. TN/TJ/17.

நூல் - அஞ்சல்.

11. The Curator,
Govt. Oriental Manuscripts Library.
M a d r a s. 600 005

ஆசிரியர்,
தமிழ்ப் பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை